விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 19 வெள்ளிக்கிழமை (02.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-6738)

## வாள்வெட்டு சூத்திரதாரிகளை இலங்கை கொண்டுவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் தலைமறைவாக முற்பட்டவேளை கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளின் முக்கிய சூத்திரதாரிகளை விரைவில் இலங்கைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள் 04

## காணாமல்போனோர் அலுவலகம் தேவை


(கொழும்பு)

காணாமல்போனோர்கள் தொடர்பான அலுவலகத்தை உருவாக்க ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்காக புதிய அரசாங்கம் 2015-ம் ஆண்டு பல உறுதிமொழிகளை வழங்கியிருந்தது.

ஆனால் அந்த உறுதி மொழிகள் எவையும் உரிய வகையில் அமுலாக்கப் 04

## சென்னை சில்க்ஸில் தீ விபத்து



சென்னை- தியாகராஜா நகரில் அமைந்துள்ள சென்னை சில்க்ஸ் கட்டடத்தில் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட பாரிய தீ விபத்து காரணமாக ரூ.300 கோடிக்கு மேல் (இந்திய ரூபாய் மதிப்பில்) சேதம் ஏற்பட்டுள்ளது. (12-ம் பக்.)

## 15 கிலோ தங்கம் பறிமுதல் கடத்திய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இருந்து படகு மூலம் இந்தியாவுக்கு கடத்தப்பட்ட சுமார் நான்கு கோடி (இந்திய ரூபாய்) மதிப்பிலான 15 கிலோ தங்கம் இராமேஸ்வரம் பகுதியில் மத்திய வருவாய் புலனாய்வுத்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 04

## பொன்னாலை - திருவடிநிலைக்காடு தீப்பற்றி எரிந்து பல ஏக்கர் நாசம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பொன்னாலை தொடக்கம் திருவடிநிலை வரையான காடு நேற்றைய தினம் தீப்பற்றி எரிந்ததில் பல ஏக்கர் கணக்கான காடு நாசமாகியுள்ளது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் மேற்படி காடு தீப்பற்றி எரிவதைக் கண்ட உத்தியோகத்தர்கள் சிலர் அது தொடர்பாக வலி. மேற்கு பிரதேச செயலாளர் செல்வி பிறேமினி மற்றும் பிரதேசத்திலுள்ள கடற்படை 04

## எதிர்வு கூற முடியாது!

(கொழும்பு)

நவீன தொழில்நுட்ப உபகரணத்தின் உதவியுடன் கூட சில மணித்தியாலங்கள் அல்லது சில நிமிடங்களுக்கு முன்னதாகவே மழை வீழ்ச்சி குறித்து எதிர்வு கூற முடியும். 04

## வீட்டுக் கிணற்றிலிருந்து 9 கைக்குண்டுகள் மீட்பு



(கரணவாய்)

பருத்தித்துறை கடற்கரை வீதியில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றில் இருந்து ஒன்பது கைக்குண்டுகளை விசேட அதிரடிப் படையினர் மீட்டு 04

## ஒரே குடும்பத்தில் மூவர் உள்ளிட்ட
# ஐந்து நபர்களுக்கு மரண தண்டனை
## வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்ட மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்த மூன்று முக்கிய கொலை வழக்கில் எதிரிகளாக குறிப்பிடப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் உட்பட ஐந்து நபர்களுக்கு எதிராக சந்தேகத்திற்கு இடமின்றி வழக்கு விசாரணைகளின் போது குற்றம் நிரூபிக்கப்பட்டது. இதையடுத்து வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் எதிரிகளுக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார். (04-ம் பக்.)

## மகிந்த ராஜபக்ஷ ஜப்பான் பயணம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு ஜப்பானை சென்றடைந்துள்ளார்.

வழிபாட்டினை நோக்கமாக கொண்டு அமைந்த இவ்விஜயத்தில் சுமார் 24

## அமைப்பாளர்கள் நேற்று நியமனம்

(கொழும்பு)

அனர்த்தத்திற்கு உட்பபாத பிரதேசங்களை சேர்ந்த அமைச்சர்களை அனர்த்தத்திற்குள்ளான தொகுதிகளின் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளுக்காக அமைப்பாள 04

## கார் விபத்தில் சிறுவன் மரணம்

(கொழும்பு)

ஹெலியகொட மண்சரிவில் உயிரிழந்தரின் எட்டாம் நாள் கிரியைக்கு சென்று திரும்பி கொண்டிருந்தவர்களின் கார் 60 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் 6 வயது சிறுவன் பலியானதுடன் ஒரே 04

## இராணுவ சிப்பாய் கஞ்சாவுடன் கைது

(யாழ்ப்பாணம்)

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் இராணுவ பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பகுதியில் நேற்று முன் தினம் இரவு கடமையில் இருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தனது உடைமையில் 22 கிராம் கஞ்சாவை வைத்திருந்துள்ளார்.

அந்த நேரம் தேடுதல் நடவடிக் 04

## நல்லிணக்கம், சமாதானமின்றி பொருளாதார வெற்றி சாத்தியமில்லை - மங்கள



(கொழும்பு)

நாட்டில் நல்லிணக்கத்தையும் நீடித்த சமாதானத்தையும் ஏற்படுத்தாமல் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது என நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று 24

## குப்பைகள் கொட்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை
### யாழ்.மாநகர சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர எல்லைக்குள் கழிவகற்றல் தொடர்பாக இன்றைய தினம் தொடக்கம் புதிய நடவடிக்கை அமுல்படுத்தப்படவுள்ளது டன் காக்கைதீவு பகுதியில் சட்டவிரோதமாக குப்பைகள் கொட்டுபவர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசனால் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில். 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு, செல்வபுரம் பகுதியில் 4 பரப்பு (1/4 ஏக்கர்) காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: (C-6745)

077 998 9911
071 591 9109


# கிளி., மடு கல்வி வலயங்களுக்கு புதிய கல்விப் பணிப்பாளர்கள்

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள கிளிநொச்சி, மடு ஆகிய இரண்டு கல்வி வலயங்களுக்கும் புதிதாக நியமனம் செய்யப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தமது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதன்படி நேற்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு மடு வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி மாலினி வெனிற்றன் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளராக மடு கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் திருஞானம் ஜோன் குயின்ரஸ் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர்கள் இருவரது நியமனங்களும் வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனால் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதன் பிரகாரமே நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(செ-15, 312)

## ஐ.சி.சி சம்பியன்ஸ் ரிராபி இங்கிலாந்து வெற்றி

பங்களாதேஷ் - 305/6 (50 ஓவர்கள்)
இங்கிலாந்து - 308/2 (47.2 ஓவர்கள்)
இங்கிலாந்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.
ஆட்ட நாயகன் - ரூட் (இங்கிலாந்து)


குருவே துணை

வாழ்க வையகம்  வாழ்க வளமுடன்

### யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை

பெருமையுடன் வழங்கும்

**மனவளக்கலை யோகா எனும் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள்**

**உடலில் நோய்களா?**
காயகல்பப் பயிற்சிகள் மற்றும்
எளியமுறை உடற்பயிற்சிகள்

**மனதில் குழப்பங்களா?**
எளியமுறை தியானப் பயிற்சிகள்

**வாழ்க்கையில் சிக்கல்களா?**
அகத்தாய்வு பயிற்சிகள்

இடம் : யாழ்ப்பாணம், அறிவுத் திருக்கோவில்
காலம் : 03.06.2017 (சனி) மாலை 5.00 மணி

**வழங்குபவர்**

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் மனவளக்கலை பேராசிரியர்
அருள்நிதி **இந்திரா சண்முகசுந்தரம்** அவர்கள்

**அருள்நிதியர்களுக்கான புத்தாக்க பயிற்சி**

04.06.2017 (ஞாயிறு) காலை 9.00 - மாலை 4.00 மணிவரை நடைபெறும்.
அனைத்து அருள்நிதியர்களும் கலந்து பயிற்சியின் தன்மை பற்றி முழுமையாக அறிந்து கொள்ளவும்.

**நெறியாளர்கள்**

மனவளக்கலை பேராசிரியர்கள்
அருள்நிதி இந்திரா சண்முகசுந்தரம் அவர்கள்
அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள்

**சர்வதேச யோகா தினம்**

21.06.2017 மாலை 04.30 மணிக்கு யாழ்.அறிவுத் திருக்கோவிலில் நடைபெறவுள்ளது.
மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும்
கலந்து சிறப்பிக்கும் வண்ணம் *அன்புடன் அழைக்கின்றோம்*

பயிற்சி பெற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இலக்கம் 021 222 2772, 071 440 3268

வாழ்க வளமுடன்

(9104)

யாழ்.அறிவுத் திருக்கோவில் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா செல்லையா



அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்லையா நேற்று (01.06.2017) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - பாக்கியம் தம்பதிகளின் மகளும் தவராசா (சமாதான நீதவான்), சண்முகராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும் சந்திரா, தேவகுமாரி (சாந்தி - பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் பத்மேஸ், ஜினோமேஸ், ஜெயோமேஸ், டெனிக்மேஸ், ஜெபோன்ஸ்சன் (பிரான்ஸ்), பெவின்சி (பிரான்ஸ்), கோபிசான் (பிரான்ஸ்), கொலின்சி (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் கோபிஷன், அபிஷன், மகிஷன், லக்ஷன், தஸ்மிகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2017) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சபாபதிப்பிள்ளை வீதி.
சுன்னாகம்.
021 224 0467, 077 606 2768 (C-6750)

தகவல் -
தவராசா (மகன்)
(சமாதான நீதவான்)

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



மனை மகிழ
05 - 12 - 1983

மனை நெகிழ
02 - 06 - 2013

### செல்வன் சுப்பிரமணியம் பார்த்தீபன்



பல்கலையும் கற்று பட்டம் பல பெற்று
குறைவிலா வாழ்வு வாழ்வாய் என
பெற்றவளும் உறவுகளும் நினைத்திருக்க
இடைநடுவில் சென்றதன் மாயம் என்ன எம் செல்வா!
உன் உயர் பட்டம் கண்டு பெற்றவளும்
உறவுகளும் மகிழ்ந்திருக்க இடையினில் நடந்ததென்ன?
பெற்றவள் அவ்மகிழ்வோடு பரமனடி சேர்ந்தாள்
பெற்றவள் பிரிவால் பெருந்துயரம் நீ கொண்டாய்
பெற்றவரை முன்பிரிந்தாய் பெற்றவளை பின்பிரிந்தாய்
இருவர் பிரிவாலும் இரட்டிப்புக் கவலை கொண்டாய்
பெற்றவரிடம் போவேன் என நீ பகர்ந்தாய்
தீரா நோய் உனக்குத் துணைநின்று
உன் வார்த்தை பொய்க்காமல் காலன்
பாசவலையில் கைப்படுத்திக் கொடுத்ததுவோ?
வார்த்தை தவறாமல் பெற்றவரிடம் சென்றாயோ?
உனையும் உறவுகளையும் பிரிந்து பெருந்துயர் நாமடைந்தோம்
எம் இனிய உறவுகளே! ஆண்டவன் சந்நிதியில்
சாந்திபெற அனுதினமும் இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-6747)

புலோலி தெற்கு,
புலோலி.

குடும்பத்தினர்

## வட லண்டன் திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம் நூதன கருங்கல் ஆலய திருக்குடமுழுக்கு - 2017

லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயத்தின் திருக்குடமுழுக்கு விழா 04.06.2017 அன்று நடைபெறவுள்ளது. இந்த விழா இனிதே நடைபெற்று அருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்மன் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைத்து பெருவாழ்வு வாழ எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் சார்பில் வாழ்த்தி நிற்கின்றோம்.

மேலும் இந்தப் பெருங்கோயில் அமைக்கும் கைங்கரியத்தை சைவத் தமிழ் மரபிற்கேற்ப அமைக்க உளம்கொண்டு அரும்பாடுபட்டு உழைத்த தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் முகாமைக்குழு உறுப்பினர்கள், பிரதம குருக்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றிகளும் பாராட்டுக்களும்.

தலைவர்- தி.இராசநாயகம்
பணிப்பாளர்கள், பணியாளர்கள்
இல்லக் குழந்தைகள்

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி (C - 6749)

## முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### MBA கற்கைநெறிக்கான தெரிவுப் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் MBA கற்கைநெறிக்கான தெரிவுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 04.06.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தில் நடைபெறவுள்ளது. அதற்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் மேலதிக விபரங்களுக்குப் பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொலைபேசி இல: 077 715 5060

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (C-6744)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருப்பு வாக்கை இலக்கு வைத்தே சிலர் தீர்மானங்களை எடுக்கின்றனர்

## ஜனாதிபதி மைத்திரி குற்றச்சாட்டு



(கொழும்பு)

**அரசியல் பேதங்களை மறந்து அனைவரும் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்கள் பிரநிதிகள் விருப்பு வாக்கை இலக்கு வைத்தே சிலர் தீர்மானங்களை எடுக்கின்றனர் எனக் குற்றம் சாட்டியுள்ளார்.**

காலி மாவட்ட இணைப்புக் கூட்டத்தில் நேற்று (வியாழக்கிழமை) பங்கேற்ற போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில்வெள்ள அனர்த்தத்தை தடுக்கும் முறைமை ஐம்பது ஆண்டுகள் பழமையானதாக காணப்படுகின்றது என ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

திட்டமொன்றை மாற்றிய மைக்க முயற்சிக்கும் போது எதிர்ப்பை வெளியிடும் தரப்பினர். அனர்த்தங்களின் போதும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக தெரிவித்த ஜனாதிபதி. ஏற்படக்கூடிய அனர்த்தங்களை புரிந்து கொண்டு அதற்கு காத்திரமான தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை. அரசியல் பேதங்களை களைந்து அனைவரும் வெள்ள அனர்த்தங்களை தடுக்க புதிய திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7)

## தெல்லிப்பழையில் சுகவாழ்வு சதுக்கம்

### சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பிரகடனம்

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை பிரதேச செயலகம் இணைந்து நடத்திய மது, புகைத்தலால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

இதன் போது தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் குட்பட்ட பகுதியை சகவாழ்வு சதுக்கமாக பிரகனடப்படுத்தப்பட்டது. மதுபானம், புகைத்தல், பொலித்தீன், பிளாஸ்ரிக், விவசாயஇரசாயனங்கள்ஆகியவை மனிதனின் பொதுச் சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களின் பாவனைகள் தடைசெய்யப்பட்ட வலயமாக தெல்லிப்பழை சந்தியிலிருந்து தெல்லிப்பழை சுகாதார வைத்தியசாலை வரையிலான பிரதேசமே இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டது.

பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்கும் "எங்கள் வீடு மது புகைத்தலற்ற மகிழ்வான இல்லம்" என்ற வாசகம் கொண்ட ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டு விழிப்புணர்வு செயற்பாடுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், புற்றுநோய் வைத்திய நிபுணர்கள், தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (இ-5-102)

## தமிழரின் எதிர்காலம்மீது நடத்தப்பட்ட தாக்குதலே யாழ்.பொதுநூலக எரிப்பு

### வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் எதிர்காலத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் என வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01ஆம் திகதி நள்ளிரவு இராணுவம் பொலிஸ் மற்றும் குண்டர்களால் யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்ட 36 ஆவது ஆண்டு தினம் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த அழிப்பு நடவடிக்கைக்கு ஆட்சியில் உள்ளவர்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும். அதற்கான பொறுப்புக் கூறல் வழங்கப்பட்டேயாக வேண்டும். யாழில் சிறந்த முறையில் தேர்தலை நடத்துபவர்கள் இருந்த போதிலும் தேர்தலுக்காக அலுவலர்களை கொண்டு வருவதாக கூறிவிட்டு தெற்கிலிருந்து குண்டர்களை அழைத்து வந்து மிகப் பெரும்நூலகத்தை 97 ஆயிரம் புத்தகங்கள் கருகம் படி எரித்து சாம்பலாக்கியவர்கள் இவற்றிக்கு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## தமிழின அழிப்பின் ஒரு அடையாளமாக யாழ்.பொது நூலகம்

### வடக்கு அவைத்தலைவர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுடைய பண்பாட்டு கலாசார இன அழிப்பின் ஒரு அடையாளமாக தான் யாழ்.பொது நூலகம் தற்போது உள்ளது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் இந்த அழிப்பு நடவடிக்கைகள் தற்போதும் தொடர்வதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01 ஆம் திகதி நள்ளிரவுஇராணுவம்பொலிஸ்மற்றும் குண்டர்களால் யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட 36 ஆவது ஆண்டு தினம் நேற்றையதினம் அனுஸ்டிக்கப்பட்டது. இந்த நினைவு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தேர்தலுக்காக தெற்கில் இருந்து அழைத்து வரப்பட்ட குண்டர்களும் இராணுவத்தினரும் பொலிஸாரும் சேர்ந்து தெற்காசியாவின் மிகப் பெரிய நூலகமான இந்த நூலகத்தை எரித்த செயலை என்றைக்குமே மன்னிக்க முடியாது. ஒரு இனத்தின் அத்தி வார மாக உள்ள கல்வியை அளிக்கும் செயலாகவே இது உள்ளது.



இந்த பண்பாட்டு இன அழிப்பு தற்போதும் பல்வேறு வடிவங்களில் தொடர்கின்றன. இதனை நாங்கள் உணர்ந்து கொண்டுதான் உள்ளோம். அவற்றுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம் என அவைத் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## வாக்காளர் பதிவு தொடர்பில் யாழில் விழிப்புணர்வு திட்டம்

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் தினத்தை முன்னிட்டு வாக்காளர் பதிவு தொடர்பில் பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் செயற்திட்டம் ஒன்று நேற்றைய தினம் யாழில் முன்னெடுக்கப்பட்டது.



யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வாக்காளர் பதிவு தொடர்பாக பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் நடைபவனி நேற்றையதினம் காலை யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு வைத்தியசாலை வீதியூடாக சென்று மாவட்ட செயலகத்தில் நிறைவடைந்தது.

நாடளாவிய ரீதியில் வாக்காளர் தினம் அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிலையில். வாக்களிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும். நூறுவீத வாக்காளர் பதிவை வலியுறுத்தியும். "வாக்கு உங்களின் உரிமை அதைவிட உங்களின் பொறுப்பு" எனும் தொனிப்பொருளில் தேர்தல்கள் திணைக்களத்தினால் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.




அத்துடன் வாக்காளராக பதிவதன் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக பல்வேறு நிகழ்வு மற்றும் நாடகங்களும் யாழ். மாவட்ட செயலக கேட் போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேத நாயகன். தேர்தல் கள் ஆணைக்குழு அங்கத் தவர் பேராசிரியர் எஸ்.ரட்ண ஜீவன் மற்றும் மாவட்ட தேர்தல் ஆணையாளர் அகிலன் உள்ளிட்ட பலர் இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விபத்தில்...

குடும்பத்தை சேர்ந்த மூவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு ஹட்டன் பிரதான வீதியின் கினிகத்தேன நகரை அண்மித்த பகுதியிலே நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

கினிகத்தேனை அம்பகமுவ சிங்கள வித்தியாலயத்தில் தரம்-1 கல்வி பயிலும் பத்தின் தேவேந்திர பண்டார சேனாரத்ன என்ற சிறுவன் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

காரில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த குறித்த சிறுவனின் தாய் தந்தை மற்றும் பாட்டி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

காயமுற்ற பாட்டி நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும் பிரதேச செயலகத்தில் பணியாற்றிய தாய் தந்தை ஆகியோர் கினிகத்தேன வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பலியான சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்கு நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (செ-11)

## எதிர்வு கூற...

மழை ஆரம்பித்த பின்னர்தான் மேகத்திலிருந்து பெய்யும் மழையின் அளவுகுறித்துக் கூறமுடியும். இரண்டு நாட்களுக்கு முன்னதாக மழை குறித்து அறிந்து, எதிர்வு கூறக் கூடிய வசதிகள் எந்த நாட்டிலும் இல்லை. அத்துடன், இலங்கையில் அந்த உபகரணம் இல்லை என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

எம்மிடம் உள்ள முறையை பயன்படுத்தி ஒரு நாளுக்கு முன்னதாகவே, சில இடங்களில் 150 மில்லிமீற்றர் மழை பெய்யும் என்று அறிவித்திருந்தோம். எனினும், 500 மில்லிமீற்றருக்கும் அதிக மழை பெய்யுமென நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, நாட்டின் தற்போதைய அனர்த்த நிலை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது, அவர் இதனைக் கூறினார். (இ-7)

## அமைப்பாளர்கள்...

ராக நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அவர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தங்களது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அனர்த்தத்திற்குள்ளான தொகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களின் சகல ஒருங்கிணைப்பு தொடர்பாகவும் கண்டறிதல் இந்த புதிய அமைப்பாளர்களின் கடமையாகும்.

அதற்கேற்ப நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களின் பெயர் பட்டியல் பின்வருமாறு.

**களுத்துறை மாவட்டம்**

புளத்சிங்கள தொகுதி-நிமல் சிறிபால டி சில்வா, கலவத்தை தொகுதி- எஸ்.பி.திசாநாயக்க, பண்டாரகம தொகுதி-பாட்டலி சம்பிக்க ரணவக்க, மத்துகம தொகுதி-லக்ஷ்மன் கிரியெல்ல, ஹொரண தொகுதி-சரத் அமுனுகம, களுத்துறை தொகுதி -ரவூப் ஹக்கீம் - அர்ஜுன ரணதுங்க

**மாத்தறை மாவட்டம்**

அக்குரஸ்ஸ தொகுதி-அநுர பிரியதர்ஷன யாப்பா, தெனியாய தொகுதி-அகில விராஜ் காரியவசம், மாத்தறை தொகுதி -ரவி கருணாநாயக்க, வெலிகம தொகுதி-ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஹக்மன தொகுதி-விஜித் விஜயமுனி சொய்சா

**காலி மாவட்டம்**

ஹினிதும தொகுதி-துமிந்த திசாநாயக்க, பத்தேகம தொகுதி-பி.ஹரிசன், பெந்தர-எல்பிட்டிய தொகுதி ஸ்ரீ- விஜயதாச ராஜபக்ஷ

**இரத்தினபுரி மாவட்டம்**

கலவான தொகுதி -சுசில் பிரேமஜயந்த, இரத்தினபுரி தொகுதி-ரிஷாட் பதியுதீன், எஹலியகொட தொகுதி-எஸ்.பி.நாவின்ன, பெல்மடுல்ல தொகுதி-காமினி ஜயவிக்கிரம பெரேரா, நிவித்திகல தொகுதி -நவின் திசாநாயக்க

**அம்பாந்தோட்டை மாவட்டம்**-பைசர் முஸ்தபா ஹரின் பெர்னாண்டோ

**கேகாலை மாவட்டம்**-தயா கமகே, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா (செ-11)

## குப்பைகள் கொட்டு...

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தியிலிருந்து காக்கைதீவு பகுதியூடாக செல்லும் வீதியின் இரு மருங்கிலும் பெருமளவில் கொட்டி குவிக்கப்பட்டிருந்த திண்மக் கழிவுகளை யாழ் மாநகரசபை ஊழியர்கள் அகற்றி வீதியை நேற்றையதினம் சுத்தப்படுத்தியுள்ளார்கள் .

வீட்டுக்கழிவுகளை மூட்டைகளில் கொண்டு வந்து போடுபவர்கள் பலர் தாம் வீடுகளில் நிற்கும் நேரங்களில் வீட்டுக் கழிவினை (சமையலறை கழிவினை ) மாநகரசபை ஊழியர்களிடம் கையளிக்க முடியாமல் அவதிப்படுபவர்களே என்ற எடுகோளின் அடிப்படையில் இன்றில் இருந்து மாற்று ஏற்பாடு ஒன்றுக்கு செல்வது என்று மாநகர சபை தீர்மானித்துள்ளது.

இவ்வாறு கையளிப்பதற்கு அவதிப்படுபவர்கள் தமது வீட்டுக் கழிவினை (சமையலறை கழிவினை) உக்குகின்ற கழிவுகள், உக்காத கழிவுகள் எனத் தரம் பிரித்து பைகளில் இட்டு காக்கைதீவு மீள் சுழற்சியகத்தில் அல்லது கல்லுண்டாய் திண்மக் கழிவகற்றும் இடத்தில் அமைந்துள்ள சபையின் அலுவலகங்களில் 24 மணி நேரமும் கையளிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இங்கே வாகனங்களில் உதிரியாகக்கொண்டு வருவதோ, பொதியிடப்படாது கொண்டு வருவதோ ஏற்றுகொள்ளப்படமாட்டாது. பெருமளவான கழிவுகளை வைத்திருப்பவர்கள் மாநகர சபையின் கட்டணக் கழிவகற்றும் பிரிவுடன் தொடர்புகொண்டு அகற்றமுடியும்.

கல்லுண்டாய் அராலி வீதி உலக வங்கியின் நிதியுதவியுடன் மூலோபாய நகரங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அழகுறகாப்பெற் வீதியாக அமைக்கப்படவிருப்பதால் அந்த இயற்கை அழகுடன் கூடிய பகுதியை இப்போதே பாதுகாப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

யாழ்.மாநகர சபை கண்காணிப்பு பிரிவு மற்றும் சி.சி.ரிவி கமராவின் கண்காணிப்பும் இவ் வீதி பகுதியில் இருந்தும் சமூகப்பொறுப்பற்ற வகையில் பெருமளவு கழிவுகளை கொட்டுவோர் தொடர்பாகவும் அங்குள்ள தரவை, சிறிய குட்டைகள், கடல் நீரேரி மற்றும் அராலிப் பாலத்துக்கு கீழ் தங்கள் திரவக் கழிவுகளை விடுவோர் தொடர்பாகவும் பொது மக்கள் மாநகர சபைக்கு தகவல்களை வழங்க முன்வர வேண்டும்

இது தொடர்பிலான தகவல்களை 0777 061181 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மாநகர சபை கண்காணிப்பு பிரிவு உத்தியோகத்தரிடம் தெரிவிக்கலாம். இதன் மூலம் அவ்வாறான சமூகப் பொறுப்பற்றவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## வீட்டுக் கிணற்றிலி...

செயலிழக்கச் செய்துள்ளனர்.

மேற்படி பகுதியில் உள்ள வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் இருந்து வருகை தரவுள்ள நிலையில் அவ் வீட்டு வளவில் இருந்த கிணற்றை கடந்த செவ்வாய்க்கிழமை சுத்தம் செய்தபோது இரண்டு கைக்குண்டுகள் வெளியே எடுக்கப்பட்ட மணலுடன் காணப்பட்டது.

இதையடுத்து அப்பணி நிறுத்தப்பட்டு பருத்தித்துறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்று விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் நேற்று, கிணற்றை அகழ்வு செய்த போது மேலும் 7 கைக்குண்டுகள் மீட்கப்பட்டது. முழுவதுமாக அங்கிருந்து மீட்கப்பட்ட ஒன்பது கைக்குண்டுகளும் பின்னர் வல்லிபுரம் பகுதியில் உள்ள ஆட்களற்ற பகுதியில் வைத்து செயலிழக்கச் செய்யப்பட்டிருந்தது. (செ-60)

## பொன்னாலை-திரு...

யினர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

உடனடியாகவே சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேச செயலாளர் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு பிரிவிற்கு தகவல் கொடுத்தார். வலி.மேற்கு பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் அங்கு அழைத்த பிரதேச செயலாளர், உத்தியோகத்தர்கள் அனைவரையும் தீயணைக்கும் பணியில் ஈடுபடுத்தினார். இதன்போது அங்கு வந்த கடற்படையினரும் சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தொழிலாளர்களும் முழு வீச்சில் தீயணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

அதேவேளை அங்கு விரைந்து வந்த யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட போதிலும் தீ பரந்து எரிந்தமையால் அவர்களால் உடனடியாக கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் வலி.மேற்கு பிரதேச சபை, காரைநகர் பிரதேச சபை மற்றும் காரைநகர் பிரதேச செயலகத்தின் உதவியும் கோரப்பட்டது.

காரைநகர் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் மற்றும் பிரதேச சபைச் செயலாளர் திருமதி உருத்திரசாம்பசிவன் ஆகியோர் உடனடியாகவே பவுஸர்களில் தண்ணீரை அனுப்பிவைத்தனர். அத்துடன் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளரும் பவுஸர்களில் நீரை அனுப்பியதுடன் பல தொழிலாளர்களையும் அங்கு அனுப்பியிருந்தார்.

நூற்றுக்கணக்கானோரின் தீவிர முயற்சியின் பயனாக பிற்பகல் 3.00 மணியளவில் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

குறித்த காட்டு விறகுகளை வெட்டச் சென்றவர்கள் தவறுதலாகவோ அல்லது விசமிகள் வேண்டுமென்றோ காட்டினுள் தீமூட்டி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்ற நிலையில் அது தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (செ-9)

## இராணுவ சிப்பாய்...

கையில் ஈடுபட்டிருந்த இராணுவ பொலிஸார் அவரை சோதனை செய்தபோது அவரிடம் இருந்து கஞ்சாவை கைப்பற்றியதுடன் அவரை கைது செய்திருந்தனர். பின்னர் நேற்றைய தினம் காங்கேசன்துறை பொலிஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைத்துள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸார் நேற்றைய தினம் குறித்த சிப்பாயை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்திய வேளை இன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## காணாமல்போனோர்...

படாமல் இருப்பது கவலை அளிப்பதாகவும் காணாமல் போனவர்களை கண்டறிவது தொடர்பான பணிகளுக்கான அலுவலகத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகளும் தற்போது ஸ்தம்பித்துள்ளது.

இதனை வலியுறுத்தி காணாமல்போனவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டமும் கண்டுகொள்ளப்படாமல இருப்பதாக நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (செ)

## வாள்வெட்டு...

ளது.

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத குழுக்களை இயக்கி வருபவர்கள் என பொலிஸாரால் தேடப்பட்டு வந்த தேவா, பிரகாஸ் உட்பட மூன்று முக்கிய நபர்கள் கடந்த 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இந்தியா திருச்சியில் வைத்து இந்திய உளவுத்துறை பொலிஸாரால் (கியூ பிரிவு) கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு எதிராக கொலை, கப்பம், சட்டவிரோத குழுக்களை உருவாக்குதல், வாள்வெட்டு சம்பவங்கள், பெற்றோல் குண்டு தாக்குதல் போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் பதிவுகள் காணப்படுவதாகவும் இவர்கள் உடனடியாக இலங்கையில் தேடப்படும் குற்றவாளிகள் என இலங்கை பொலிஸாரால் இந்திய பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவர்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான சட்டரீதியான ஏற்பாடுகளை இலங்கை குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவர்களுடன் தொடர்புடைய ஏனைய நபர்களை சமூக வலயத்தளங்கள் ஊடாக கண்காணித்து விரைவில் கைது செய்வதற்கான விசேட நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. (செ-9)

## 15 கிலோ தங்கம்...

இந்தியா இராமேஸ்வரம் அருகே இலங்கையிலிருந்து படகு மூலம் 15 கிலோ தங்கம் கடத்தி வரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் புலனாய்வு துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை வைத்து இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 2 பேர் மத்திய வருவாய் புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டிருந்தது.

அப்போது அவர்களிடம் இருந்து 15 கிலோ தங்கத்தை பறிமுதல் செய்ததுடன் இருவரையும் கைது செய்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

## ஐந்து நபர்களுக்கு...

மேற்படி வழக்குகள் நேற்று வியாழக்கிழமை வவுனியா மாவட்ட மேல் நீதிமன்றில் நடைபெற்ற போதே நீதிபதியால் இவ்வாறு தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது.

**சுந்தரபுரம் சுகந்தன் கொலை வழக்கு**

வவுனியா சுந்தரபுரம் பகுதியில் கடந்த 2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி 24 வயதுடைய கந்தசாமி சுகந்தன் என்ற இளைஞர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக சுந்தரபுரத்தைச் சேர்ந்த ஒரே குடும்ப உறுப்பினர்களான தந்தையான குட்டப்பன் வேலாயுதம் அவரது புதல்வர்களான வேலாயுதம் தினேஸ்குமார், வேலாயுதம் மனோஜ் ஆகியோர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று வியாழக்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றவாளிகள் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளமையால் மூன்று பேருக்கும் நீதிபதியினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குற்றவாளிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட இளைஞரது குடும்பத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

**மூன்று முறிப்பு கொலை வழக்கு**

வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியில் கடந்த 2010ஆம் ஆண்டு ஆராய்ச்சிலாகே தர்மகீர்த்தி என்ற குடும்பத் தலைவர் படுக்கையறையில் வைத்து எரித்து கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவரென சந்தேகத்தின் பேரில் அவரது மனைவியான ரோகிணி தமயந்தி என்பவரை கைது செய்து வவுனியா பொலிஸார் விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நடைபெற்று வந்த நிலையில், கடந்த 2014.01.25 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வவுனியா மாவட்ட மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில், நேற்றைய தினம் இறுதி தீர்ப்பிற்காக விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேகத்திற்கு இடமின்றி கொலை செய்யப்பட்டவரின் மனைவியே கணவரை எரித்து கொலை செய்துள்ளமை விசாரணையில் நிரூபிக்கப்பட்டமையால் எதிரிக்கு மரண தண்டனை வழங்கி நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

**கூழாங்குளம் இந்துமதி கொலை வழக்கு**

கடந்த 2008ஆம் ஆண்டு வவுனியா சாத்திரி கூழாங்குளம் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்து நகைகளை கொள்ளையடித்ததுடன் அங்கிருந்த சிவகுமார் இந்துமதி என்ற பெண்ணை கொலை செய்த குற்றத்துக்காக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு வவுனியா மாவட்ட நீதிமன்றில் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கடந்த 2016.06.02 அன்று வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை வழக்கு இறுதி விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரியான வி.கனகமனோகரன் என்பவரிற்கு வீட்டிற்குள் புகுந்து கொள்ளையடித்த குற்றத்திற்காக 10 வருட சிறைத் தண்டனையும் அவ்வீட்டில் இருந்த சிவகுமார் இந்துமதி என்ற பெண்ணை படுகொலை செய்த குற்றம் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதை அடுத்து எதிரிக்கு மரண தண்டனையையும் வழங்கி வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தீர்ப்பளித்துள்ளார்.

மூன்று வழக்குகளிலும் இந்தக் கொலைக் குற்றத் தீர்ப்புக்கள் வழங்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீதிமன்றத்தின் மின்விளக்குகள் அணைக்கப்பட்டன. மின் விசிறிகள் நிறுத்தப்பட்டன. நீதிமன்றத்தில் சமுகம் அளித்திருந்த அனைவரும் எழுந்து நின்றனர். நீதிபதியும் தமது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று மரண தண்டனைத்தீர்ப்புக்களை வாசித்திருந்தார். (செ-15.250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளம் கவிழ்ந்து ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி!

மாத்தறை, அத்தொடுவ பகுதியில் நேற்றுக் காலை வள்ளமொன்று கவிழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வெள்ள அனர்த்தத்தையடுத்து மாத்தறை, அத்தொடுவ பகுதியில் வள்ளமொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை (வயது-38), தாய் (வயது-30), மகன் (வயது-14) ஆகிய மூவரும் பயணித்த போது குறித்த வள்ளம் கவிழ்ந்து விபத்திற்குள்ளான நிலையில் மூவரும் இறந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

இந்திய விபூதி விற்பனைக்கு
எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூ.100), சில்லறையாகவும் (ரூ.110) பெற்றுக்கொள்ளலாம்.
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்) - 021 222 2567

# ஆடு திருடிய குற்றச்சாட்டில் இருவர் 14 நாட்கள் மறியலில்

(கரணவாய்)

ஆடுகளைத் திருடி வந்ததாக நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிபதி நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (30.5.2017)இரவு நெல்லியடிப் பொலிஸார் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை மறுநாள் (31.05.2017) பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோதே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)




# வெள்ளப் பாதுகாப்புச் சட்டம் திருத்தியமைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

1924ஆம் ஆண்டு வெள்ளப் பாதுகாப்புச் சட்டம் திருத்தியமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த சட்டத்திற்கு பதிலீடாக வெள்ள முகாமைத்துவ சட்டமொன்று புதிதாக அறிமுகம்செய்யப்படவுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்சா இது தொடர்பிலான யோசனையை அமைச்சரவையில் சமர்பித்துள்ளார். துறைசார் அமைச்சர்கள் வெள்ள அனர்த்தம் தொடர்பில் அடையாளப்படுத்த அனுமதிக்கப்படும் எனவும், அவ்வாறு அடையாளப்படுத்தப்படும் பகுதிகளுக்கு நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு பாதுகாப்பு வழங்கும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெள்ளப் பாதுகாப்பு தொடர்பிலான சட்டம் மிகவும் பழைமையானதுஎனவும்அதனைத் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S.சர்மா குருஜீ
82/4 கலட்டி அம்மன் கோவிலடி,
வண்ணார்பண்ணை.
077 784 1558

தில்லையம்பதியாள் துணை
சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் 42ஆவது ஆண்டு வசந்த வைகாசி மகோற்சவ பெருவிழா -2017
(02.06.2017) இன்று ஐந்தாம் திருவிழா பூச்சப்பறம்


முற்பகல்: 10.30 வசந்த மண்டபபூஜை, 11.30 மணிக்கு அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலாவரும் காட்சி, நண்பகல் மகேஸ்வரபூஜை (அன்னதானம்)
மாலை : 6.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, 7.30 மணிக்கு அம்பாள் பூச்சப்பறத்தில் வெளிவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.,
ஈழத்து தவில் நாதஸ்வர வித்துவான்களின் நாதஸ்வர, மேளக்கச்சேரியும் அத்துடன் இரவு 9 மணியளவில் P.S. பாலமுருகன், K.P. குமரன் இணைந்து வழங்கும் நாத சங்கமும் இடம்பெறும்.
மகோற்சவ பிரதம குரு: பிரம்ம ஸ்ரீ நா.திவாகரக்குருக்கள் (தில்லையம்பதி)
ஐந்தாம் திருவிழா உபயகாரர். முத்தொளி. இங்ஙனம் : பரிபாலன சபை

(9094)

# இராசி பலன்

02.06.2017

(வைகாசி 19, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
அட்டமி முற்பகல் 11.35 மணிவரை
பூரம் பிற்பகல் 4.56 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம், அவிட்டம்<br>இரவு 11.11 மணிக்கு<br>சனி-சந் | | |
| | | | ராகு சந் |
| | சனி | | குரு |

**மீனம்**: நிர்வாகத் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீராகும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**மேடம்**: தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்**: சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வாகன யோகத்தால் வளம் காணும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் அதிகரிக்கும்.

**மிதுனம்**: சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், பொது நல ஈடுபாடு கிடைக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்**: பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைதூரத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

**மகரம்**: கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது. உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**சிம்மம்**: குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் அதிகரிக்கும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படும் நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு**: வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், சாதுரியமாகப் பேசி காரியங்களை சாதிப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளை சந்திக்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்**: செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொலைபேசி வழித் தகவலால் மகிழ்ச்சி கூடும், உறவினர்களின் வருகையுண்டு.

**துலாம்**: புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செல்வநிலை உயரும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கன்னி**: வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்ற போது .. (படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

# பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்காக வடக்கு மக்களிடம் பொலிஸ் உதவி கோரல்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு வடக்கு மக்களிடமிருந்து உதவிகளை பெற்று வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ள யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன. இந்த உதவிகள் ஊடாக மக்களிடையே நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படும் எனவும் தெரிவித்துள்ளார். யாழ். பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையால் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ள நிலையில், பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டும் உள்ளார்கள். இந்த மக்களுக்கு நாடளாவிய ரீதியில் அனைவரும் உதவிகளை வழங்கி வருகின்ற நிலையில், நாட்டின் அனைத்து பொலிஸாரும் உதவிகளை திரட்டி வருகின்றனர். இவ்வாறு வடக்கில் யாழ்ப்பாணத்திலும் உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்து மக்கள் மற்றும் வணிகர்கள் இந்த உதவிப் பொருட்களை வழங்கி வருகின்றனர். இவ்வாறு பொருட்கள் சேர்க்கும் பணிகள் எதிர்வரும் சில தினங்களில் நிறைவடையவுள்ள நிலையில் அதற்கிடையில் எமக்கு பொருட்களை அனுப்பி வைக்க முடியும். இவ்வாறு எமக்கு கிடைத்துள்ள பொருட்களை எதிர்வரும் வாரத்திற்குள் அனுப்பி வைக்கவுள்ளோம். இந்த உதவிகள் இருபகுதி மக்களிடையேயும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-4)

# தீபநாயகி சிலை சேதம்



வடமராட்சி கிழக்கு உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தின் பிரதான வாயிற்பகுதியில் வைக்கப்பட்டிருந்த தீபநாயகி சிலையை விசமிகள் உடைத்தனர். இச்சம்பவம் கடந்த 28 ஆம் திகதி இரவு இடம்பெற்றது. இவ்விடயம் தொடர்பில் பாரதி விளையாட்டுக்கழகத்தினர் மருதங்கேணி பொலிஸாருக்கும் மருதங்கேணி பிரதேச செயலருக்கும் தெரியப்படுத்தினர். இருந்தும் மருதங்கேணி பொலிஸார் விசாரணை மேற்கொள்ளவில்லை என கழகத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-3-64)




# முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலி சி.சி.த.க பாடசாலையின் முத்தமிழ் விழா எதிர்வரும் 6ஆம்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் தி. இரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கிறீன்கிறாஸ் ஹோட்டல் முகாமைத்துவப் பணிப்பாளர் தியாகராஜா ஜெகசீலன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் கந்தையா நாகரத்தினம், கௌரவ விருந்தினர்களாக பாடசாலை நலன் விரும்பி கோபாலசிங்கம் ஜீவா (கனடா), திருமதி காவேரி ராஜசிவம் (கனடா) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3- 136)

# கழிவுகளால் அவதி

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியிலுள்ள யாழ். பிரதேச செயலகத்திற்கு அண்மையில் கழிவுகள் கொட்டப்படுவதனால் சுகாதார சீர்கேடு நிலவுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இவ்வீதியை அண்மித்து பாடசாலைகள் காணப்படுவதனால் இவ் வீதியினால் பயணிக்கும் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். எனவே இவ்வீதியில் கொட்டப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கேட்டுள்ளனர். (இ-105)

# மானிப்பாய் மரக்கறிச் சந்தையில் நீர் வசதியில்லை;வியாபாரிகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மரக்கறிச் சந்தையில் நீர்த்தாங்கி இருந்தும் 3 மாதங்களாக நீர் வசதி இன்மையால் அங்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இச்சந்தையில் மரக்கறி சந்தை, அதனை அண்டிய கடைகள் என்பன காணப்படுகின்றன. வலி.தென் மேற்கு பிரதேச சபையால் ஏற்கனவே நீர் நிரப்பப்பட்டு வந்த நிலையில் கடந்து 3 மாதங்களாக நீர்த்தாங்கியில் நீர் நிரப்பப்படவில்லை. இதனால் அப்பகுதி விவசாயிகள் உணவு உண்ட பின் கைகள் கழுவுவதற்கும் குடிப்பதற்கும் மற்றும் ஏனைய இதர தேவைகளுக்கும் நீரைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3)

# வட இலங்.சுதேச மருத்துவ சபை அங்கத்தவர்களை உறுதிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சித்த ஆயுள் வேத மருத்துவக்கல்லூரி தனது செயற்பாடுகளை மீள் வலுவூட்டுவதற்காக வடமாகாண முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட இடைக்கால முகாமைத்துவ சபையால் வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் உறுப்பினர்களின் விபரங்களை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே சபையின் உறுப்பினர்கள், வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் உறுப்பினர்கள் எனக் கருதக்கூடிய பொருத்தமான ஆவணங்களுடன் எதிர்வரும் 10.06.2017இற்கு முன் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்திற்கு அலுவலக நேரத்தில் சமுகமளித்து உறுதிப்படுத்துமாறு இடைக்கால முகாமைத்துவ சபையின் தலைவரும் வடக்கு கல்வி அமைச்சின் செயலாளருமான இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ-3)

# ஊடகவியலாளர் நடேசனுக்கு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் பதின்மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்ற கட்டட தொகுதிக்கு அருகாமையில் உள்ள நினைவுத் தூபியில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# சுதந்திரத்தின் தேடலில் ஓவியர் சரத்பெரேரா உரை

"ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 48 ஆவது நிகழ்வாக "சுதந்திரத்துக்கான தேடலில்" என்ற தலைப்பில். 'ஓவியர் சரத் பெரேரா' உரை நிகழ்த்தவுள்ளார்..

உருவ அரூபவாதப் பண்புடைய ஓவியங்களை வரையும் ஓவியர் சரத்பெரேரா, 90களில் இலங்கைக் கலைக்குள் நுழைந்தாலும் இலங்கைக் கலை வரலாற்றில் '90களின் கலைப்போக்கு' என்று அறியப்பட்ட போக்கினுள் அறியப்படாத ஓவியரான இவர்தன்னுடைய உருவ அரூபவாதப் பண்புடைய ஓவியங்களின் அடிப்படைகள் பற்றி உரையாற்றுவார்.

மேற்படி நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகம், 199, கோவில் வீதி,நல்லூரில் இடம்பெறும். இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் தவறாது கலந்து பயன்பெறுமாறு ஆவணக் காப்பகத்தின் பொது முகாமையாளர் விமலா வேல்தாஸ் அறிவித்துள்ளார். (இ-3)

# மயானத்தை புனரமையுங்கள்



தென்மராட்சி மந்துவில் வடக்கிலுள்ள யானைக்காடு மயானம் நீண்ட காலமாக கவனிப்பாரற்று காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இம் மயானத்திற்கு தகனக் கொட்டகை, க்ட்டட வசதி, குடிநீர்க்கிணறு போன்றவை அமைக்கப்படாது காணப்படுகின்றன. இதனால் மழைகாலங்களில் தகனக்கிரியைகளை மேற்கொள்வதில் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் எனவே இம் மயானத்தை சீரமைக்க பொது அமைப்புக்கள் , தொண்டு நிறுவனங்கள் [illegible] வேண்டும் என [illegible] விடுத்துள்ளனர். (இ-5-10)

# கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் வழங்கப்படுகின்ற கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான நாடகம், எழுத்தாளர், ஓவியம், சிற்பம், பொம்மலாட்டம், தற்காப்புக் கலை, நடனம், தாளவாத்தியம், இசை, மெஜிக், கிராமியக் கலை, கவிக் கலைஞர், திரைப்படக்கலை மற்றும் ஏனைய கலைத்துறைகளில் சிறந்த சேவையாற்றிய அறுபது வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.

எனவே தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவைச் சார்ந்த மேற்குறிப்பிட்ட துறைகளில் சேவையாற்றிய கலைஞர்கள் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 15.06.2017 ஆம் திகதிக்கு முன்னர் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்கலாம் என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிராகப் புலம்பெயர் தமிழ் இளைஞர்கள் கோசம் எழுப்பி குறித்த நிகழ்வை இல்லாமல் செய் தனர். இது சுமந்திரனுக்கு மிகுந்த ஆத்திரத்தை ஏற்படுத்தியது. பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைப்



பொறுத்தவரை அவர் சடுதியாகக் கோபப்படும் இயல்புடையவர். தான் சொல்ல வந்த விடயங்களை ஆறுதலாகச் சொல்லக்கூடிய நிதானம் அவரிடம் இருந்தாலும் கோபத்தின் வெளிப்பாடு அவரின் முகத்தில் தெரிவது வழக்கம்.

அவுஸ்திரேலியச் சம்பவம் அவருக்கு கோபத்தை ஏற்படுத்தியபோது தனக்கு எதிராகச் செயற்பட்ட இளைஞர்கள் ஏலவே ஓர் அமைப்புச் சார்ந்தவர்கள் என்றும் அவர்கள் ஒரு சிலரே குழப்பத்தில் ஈடுபட்டதாகவும் தனது கருத்தைப் பதிவு செய்தார்.

பொதுவில் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் தன்னை ஒரு அரசியல்வாதியாகக் காட்டுவதைவிட ஒரு சட்டத்தரணியாக காட்டிக் கொள்வதிலேயே கரிசனை கொள்பவர். அதேநேரம் தான்கொண்ட கோபத்தை எங்கோ ஓர் இடத்தில் சரித்துக் கொட்டுவதிலும் அவர் பின்னிற்பதில்லை. இவ்வாறு, தான் செய்வதன் பின்விளைவு பற்றியோ அல்லது தனது கருத்துக்கள் தான் சார்ந்த கட்சிக்கு ஏற்படுத்தக்கூடிய கஷ்ட நஷ்டங்கள் பற்றியோ அவர் இம்மியும் சிந்தித்திலர். அதற்குக் காரணம் தனது கருத்துக்கள் தொடர்பில் எவரும் கேள்வி கேட்க முடியாது என்பதுடன் சம்பந்தர் ஐயாவே என்னால்தான் இயங்குகிறார். ஆக, இலங்கைத் தமிழரசுக் கட்சியாயினும் சரி, கூட்டமைப்பாயினும் சரி அவை என்னுடையவை. எனவே என்னிடம் கேள்வி கேட்பதற்கு எந்தக் கொம்பனும் இல்லை.அவ்வாறு

## விக்னேஸ்வரனை நீக்குமாறு கட்சித் தலைமைக்கு கூறிவிட்டேன் அவுஸ்திரேலியாவில் தெரிவித்தார் சுமந்திரன்

கேள்வி கேட்பதாக இருந்தால் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் அவர்களே கேட்க முடியு ம்.

அவர் என்னிடம் கேள்வி கேட்டால் அவருடைய அரசியல் வேலைகளை அவருக்குச் செய்து கொடுப்பது யாராம்? எனவே என்னிடம் எவரும் கேள்வி கேட்க முடியாது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக இருக்கக் கூடிய மாவை. சேனாதிராசா அவர்கள் சுமந்திரனைப் போல இன்னும் ஐந்தாறு பேர் நமக்குத் தேவை என்று பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்.

ஆகவே, மாவை. சேனாதிராசா அவர்கள் சுமந்திரனை தமிழரசுக் கட்சியின் பலமாக மட்டுமன்றி தனது பலமாகவும் கருதுகிறார். கட்சித்தலைவராகத் தான் இருந்தாலும் சுமந்திரன் நினைத்தால் தான் தனக்குக்கூட பாராளுமன்றத் தேர்தலில் ஆசனம் கிடைக்கும் என்ற நினைப்பு மாவை. சேனாதிராசாவினுடையது. இது எம்.ஏ.சுமந்திரன் அவர்களுக்கு நன்கு தெரியும்.

ஆக, கட்சி நலன்பற்றிச் சிந்திப்பவர்களில் என்னைவிட எவரும் இருக்கமுடியாது என்ற சுமந்திரனின் நினைப்பு அவர் எதையும் கதைப்பதற்கு பூரண சுதந்திரம் கொடுக்கிறது என்பதே உண்மை.

இது ஒரு புறம் இருக்க, அவுஸ்திரேலியாவில் தனக்கு ஏற்பட்ட அவகௌரவத்தின் கோபத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மீது திசை திருப்புவதுதான் சுமந்திரன் கையாளும் தந்திரம்.

அவுஸ்திரேலிய வானொலி ஒன்று சுமந்திரனிடம் செவ்வி காண்கிறது. அவுஸ்திரேலியாவில் இளைஞர்களின் எதிர்ப்பால் நிகழ்ச்சி தடைப்பட்ட நிலையில் அவுஸ்திரேலிய வானொலி ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில், வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களை கட்சியில் இருந்து நீக்கி விடுமாறு கட்சியின் தலைவருக்கு தான் கூறி விட்டதாக தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை கட்சியில் இருந்து நீக்கிவிடுமாறு கட்சித் தலைமைக்குக் கூறிவிட்டேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுவதற்குள், கட்சிக்குள் தனது அதிகாரம் எவ்வாறு உள்ளதென்பதை வெளிப்படுத்துவதும் அவரின் நோக்கமாக இருந்தது.

சுமார் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்ற- தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவராக இருக்கக்கூடிய சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை கட்சியில் இருந்து நீக்கிவிடுமாறு கட்சித் தலைமைக்குக் கூறிவிட்டேன் என்று சுமந்திரன் பகிரங்கமாகக் கூறுவதற்குள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீதான சுமந்திரனின் காழ்ப்புணர்வு வெளிப்படுகிறது.

அதேநேரம் கட்சியில் இருந்து நீக்கிவிடுமாறு கட்சித் தலைமைக்குக் கூறி விட்டேன் என்றால், ஓர் உறுப்பினரை கட்சியில் இருந்து நீக்குவது என்ற விதப்புரை எம்.ஏ. சுமந்திரனிடம்தான் இருக்கிறதா? என்ற கேள்வி எழும்.

அதேவேளை கட்சியில் இருந்து முதலமைச்சர் விக்னேஸ்வரனை நீக்குவது என்பதற்குள் முதலமைச்சர் பதவியில் இருந்து விலத்துவது என்ற பொருள் உள்ளடங்கியிருக்கும்.

தவிர, தான் கட்சித் தலைமைக்குக் கூறிவிட்டதால், அது நிச்சயம் நடக்கும் என்ற நம்பிக்கை சுமந்திரனிடம் இருப்பதும் தெரிகிறது.

சரி, வடக்கின் முதலமைச்சரை கட்சியில் இருந்து நீக்குவதற்கான வலுவான காரணம் ஏதேனும் உண்டா? என்றால், அந்த வானொலிக்கு வழங்கிய செவ்வியில் சுமந்திரன் அவர்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது முன்வைக்கும் குற்றச்சாட்டு என்ன? என்றால்; பாராளுமன்றத் தேர்தலின் போது தமது கட்சிக்கு நிதித் தேவை இருந்ததாகவும் அந்த நிதித்தேவையை ஈடுசெய்யும் பொருட்டு விக்னேஸ்வரன் அவர்களை கனடாவுக்குச் சென்று நிதி சேர்த்து வருமாறு தமது கட்சி கோரியதாயினும் அவர் தனது உடல்நிலை சரியில்லை என்று கூறி கனடாவுக்குச் செல்லவோ, நிதி சேகரிக்கவோ மறுத்துவிட்டார். இஃது கட்சி நலனில் அவருக்கு எந்த அக்கறையும் இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. ஆகையால் அவரை கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என்பதாக சுமந்திரனின் கருத்து இருந்தது.

(திங்கள் வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குளத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்ட

# சிறுபோக நெற்செய்கையின் மேலதிக விதைப்புகள் அழிப்பு





கிளிநொச்சி இரணைமடு குளத்திற்கு கீழான தீர்மானிக்கப்பட்ட அளவை விட சட்டவிரோதமாக மேலதிகமாக விதைக்கப்பட்ட சிறுபோக நெற்பயிர்ச் செய்கை நேற்றுக்காலை அதிகாரிகளால் அழிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்ட தீர்மானத்திற்கமைய இரணைமடு குளத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 850 ஏக்கர் தவிர்ந்து மேலதிக்மாக செய்கை பண்ணப்பட்டது. நேற்றுக் காலை 9.30 மணியளவில் சிறு போகச் செய்கை செய்யப்பட்ட பகுதிக்கு வருகை தந்த கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் வே.ஆயகுலன்,பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன், பொறியியலாளர் செந்தூரன், பொலிஸார் மற்றும் விவசாய அமைப்புக்கள் முன்னிலையில் அழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இரணைமடுகுளத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டுக்கு 890 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு இரணைமடு குளத்திள் கீழ் உள்ள 22 கமக்கார அமைப்புகளுக்கும் வயல்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஆனால் தீர்மானிக்கப்பட்ட அளவை விட சட்டவிரோதமாக 280 ஏக்கர் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இரணைமடு குளத்தில் பத்து அடிக்கு குறைவான நீர் இருப்பதன் காரணமாக தீர்மானிக்கப்பட்ட பரப்பளவு விதைப்பை தவிர மேலதிக விதைப்பை தொடராவிட்டால் அனுமதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கும் தொடர்ச்சியாக நீர் வழங்க முடியாத நிலையில் குறித்த பயிர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதை கருத்தில் எடுத்துக் கொண்ட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாகவும் இன்றையதினம் (நேற்றையதினம்) சட்டவிரோத பயிர்ச் செய்கையான 280 ஏக்கரில் உரிமைகோரப்பட்டாத 47 ஏக்கர் முதற்கட்டமாக அழிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் ஆகியோர் இரணைமடு குளத்தின் கீழாக 22 கமக்கார அமைப்புகளின் பிரதி நிதிகளின் முன்னிலையில் சட்டவிரோத நெற்பயிர்ச் செய்கை அழிக்கும் நடவடிக்கையை மேற் கொண்டிருந்தனர்.

இதன்போது கிளிநொச்சி பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் என். சுதாகரன், கிளிநொச்சி கமநல சேவைகள் உதவி ஆணையாளர் வே.ஆயகுலன், பெரும்பாக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் சமூகமளித்திருந்தனர். (2-312-15-111)



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள செல்வபுரம் யூதாததேயு முன்பள்ளியின் விளையாட்டு விழா கடந்த மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணியளவில் நடைபெற்றபோது...

# இராணுவத்திடம் நேரடியாக கையளித்த உறவுகளை அரசிடமே நாம் கேட்க முடியும்

## சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு



இறுதி கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் நேரடியாக கையளிக்கப்பட்ட உறவுகளை அரசாங்கத்திடமே கேட்க முடியும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

யுத்தகாலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் கிடைத்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களது பெற்றோர்கள் போராடி வரும் நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் கருத்தானது பாதிக்கப்பட்ட மக்களை மேலும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தகாலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் பலர் தமிழீழ விடுதலைப் புலிகள், இந்திய இராணுவத்தினர் மற்றும் ஆயுத குழுக்களினால் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பல அமைப்புக்களின் தலைவர்கள் உயிருடன் இல்லாத நிலையில், காணாமல் போனோர் தொடர்பில் எவ்வாறு விசாரணைகளை மேற்கொள்வது என்றும் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கேள்வியெழுப்பியிருந்தார்.

இந்த நிலையிலே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு ஜனாதிபதியின் பிரதிநிதியாக இருக்கும் ஒருவர் பொறுப்பற்ற விதமாக கருத்துக்களை வெளியிடகூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கூறியுள்ளார். எனினும் இராணுவத்தி னரிடம் நேரடியாக கையளிக் கப்பட்டவர்கள் தொடர்பான சாட்சியங்கள் உள்ளதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது ஒரு நாள் விடுதலைப்புலி உறுப்பினராக இருந்தாலும் அவர்களையும் தங்களிடம் சரணடையுமாறு இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துக் கொண்டிருந்த வேளையில் ஒரு நாள் உதவியாளராக இருந்த விடுதலைப்புலிகள் உள்ளிட்ட பலர் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள்.

அவ்வாறு சரணடைந்தோர்களுக்கு என்ன நடந்தது, உண்மையில் அவர்கள் உயிருடன் உள்ளார்களா? இல்லையா? அவர்கள் இருந்தால் எங்கிருக்கிறார்கள்? இல்லை என்றால் என்ன நடந்தது, எப்படி நடந்தது, எந்த இராணுவத்தால் நடந்தது என்ற விபரத்தை இந்த அரசாங்கம் குறிப்பாக ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தியுள்ளார். (2-28)

# 'வளம்மிக்க நாளைய தினத்துக்கு ஒளிமயமான அடித்தளம்'

## புதுவருட விளையாட்டு விழா

(பனிக்கன்குளம்)

வளம்மிக்க நாளைய தினத்துக்கு ஒளிமயமான அடித்தளம் என்ற தொனிப் பொருளில் கமநல வங்கி ஏற்பாடு செய்த புதுவருட விளையாட்டு விழா நேற்று ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.



கிறிஸ் மரம் ஏறல், தலையணை சண்டை, முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், கிடுகு பின்னல, உழவர்பாடல்,விநோத உடை, பணிஸ் உண்ணுதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன்,கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி சேகரிக்கும் பணி நேற்று முதல் நடைமுறையில்

## நகரில் நான்கு நிறங்களில் குப்பைத் தொட்டிகள் வைப்பு

(குருமன்காடு)

ஜனாதிபதியின் பணிப்பிற்கமைய வவுனியா நபர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி சேகரிக்கும் பணிகள் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்புட்டுள்ளன.

இவற்றின் முதற்கட்டமாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டம் வவுனியா நகரசபையின் செயலாளர் ஆர்.தயாபரன் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகரசபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டதுடன் வவுனியா நகர மத்தியில் விழிப்புணர்வு பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இச் செயற்றிட்டத்தில் வவுனியா வர்த்தக சங்க தலைவர் ரி.கே.இராஜலிங்கம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், நகரசபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த வவுனியா நகரசபையின் செயலாளர்,

ஜனாதிபதியின் பணிப்பிற்கமைய இச் செயற்றிட்டத்தை நாங்கள் வவுனியா நகரில் செயற்படுத்தி வருகின்றோம். பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் பச்சை நிற கழிவுத்தொட்டியில் உணவுப்பொருட்கள், இலைகுழைகள், சமையலறைக்கழிவுகள், உக்கக்கூடிய பொருட்கள் (துணி வகைகள், ஆடைகள் தவிர்த்து) மற்றும் செம்மஞ்சள் நிற கழிவுத் தொட்டியில் பொலித்தீன், பிளாஸ்ரிக், துணிகள் மற்றும் நீல நிற கழிவுத்தொட்டியில் கடதாசி , காட்போட் அட்டைகள் மற்றும் சிவப்பு நிற கழிவுத் தொட்டியில் கண்ணாடிப் பொருட்கள், உலோகப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள், மாபில் பொருட்களை பிரித்துப் போட வேண்டும்.

இன்று வெள்ளிக்கிழமை முதல் வவுனியா நகரில் பல்வேறு பகுதிகளில் நான்கு நிறங்களிலான குப்பைத் தொட்டிகள் வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)




# உடைக்கப்பட்ட நிலையில் அஞ்சல் பெட்டி



(புலோப்பளை)

பளைப் பிரதேச அஞ்சல் அலுவலகத்திற்கு சொந்தமான அஞ்சல் பெட்டியொன்று உடைக்கப்பட்ட நிலையில் கவனிப்பார் அற்ற நிலையில் உள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அஞ்சல் பெட்டியானது பளை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எதிராக உள்ளது என்றும் பல மாதங்களாக உடைக்கப்பட்ட நிலையில் அதே இடத்தில் இருப்பதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். அதை அகற்றுவதற்கான நடவடிக்கையை அஞ்சல் அலுவலகமோ அல்லது பளை பிரதேச சபையோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென தெரிவித்தனர். (2-111)

## வெள்ள நிவாரணப் பொருட்கள்

# வவுனியா அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் சேகரித்து அனுப்பி வைப்பு



(குருமன்காடு)

நாட்டில் அண்மையில் நடைபெற்ற இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் பொருட்டு வவுனியா அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் பாடசாலைகள், திணைக்களங்கள் ஆகியவற்றில் சேகரிக்கப்பட்ட உணவுப்பொருட்கள், ஏனைய அடிப்படைத் தேவைகளுக்கான பொருட்கள், உலருணவுப் பொருட்கள் ஆகியவை பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் வைத்தியர் எம்.எம்.எம்.அனஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதற்காக அமைக்கப்பட்ட விசேட மையத்தில் வவுனியா வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களால் உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் வவுனியா கிளையின் வைத்தியர்கள் குழு ஒன்று பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சுழற்சி முறையில் மேலும் வைத்தியர்கள் அனுப்பி வைக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வவுனியா அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# மதுபானக் கடைகளை மூடுமாறு வவுனியாவில் துண்டுப்பிரசுரம்



(குருமன்காடு)

மக்களுடைய வாழ்வியலை சீரழிக்கும் மதுபானக் கடைகளை மூடுமாறு கோரி வவுனியாவில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மக்களின் சமூக, பொருளாதார கட்டமைப்பைச் சீரழிக்கும் மதுபானக்கடைகளை இழுத்து மூட அணிதிரளுகமாறு சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பினரால் நேற்று முன்தினம் பிற்பகல் வவுனியா மத்திய பேருந்து தரிப்பிடப் பகுதிகளிலுள்ள கடைகள், பேருந்து பயணிகளிடம் துண்டுப்பிரசுர விழிப்புணர்வு நடவடிக்கை இடம்பெற்றது.

மதுவால் சீரழியும் இளைஞர்களையும் கிராமங்களையும் மீட்டெடுப்போம் என்று துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் உலக சுற்றாடல் தின வாரம் அனுஷ்டிப்பு



(குருமன்காடு)

நாடளாவிய ரீதியில் ஜூன் மாதம் 05 ஆம் திகதி திங்கட்கிழமை உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதனையொட்டி வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் சுற்றுப்புறச் சூழல் வாரம் கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு நாளும் ஆசியர்கள், மாணவர்கள் ஆகியோர் சூழல் தொடர்பான பல்வேறு தலைப்புக்களில் உரையாற்றி வருகின்றனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை விசேடமாக சூழல் அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்து வருகை தந்த சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி ந.சொரூபி "சூழல் முகாமைத்துவமும் அபிவிருத்தியும்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். பாடசாலை அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாணவர்கள் சூழல் வாசகங்கள் தொடர்பான பதாகைகளுடன் பாடசாலை வளவில் விழிப்புணர்வில் ஈடுபட்டனர்.

"நாம் சுற்றாடலைக் காப்போம், சுற்றாடல் எம்மைக் காக்கும்" எனும் தொனிப் பொருளில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலை ஆசிரியர்கள் உரை நிகழ்த்தினர். அதே வேளை சுற்றாடல் தொடர்பான கண்காட்சியும் அன்று நடைபெற்றது.

இதேவேளை மாணவர்களிடையே சுற்றாடல் தொடர்பான பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு ஜூன் மாதம் 05 திகதி நடைபெறவுள்ள நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (2-250)

# திருட்டுக் கும்பல் தாக்கி காவலாளி படுகாயம்!

(மல்லாவி

கிளிநொச்சி சமுர்த்தி வங்கியின் வளாகத்தில் உள்ள தென்னை மரங்களில் திருட்டுத்தனமாக தேங்காய் பறித்தவர்களை வளாகத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த காவலாளி அவதானிப்பதைக் கண்டு கொண்ட திருடர்கள் காவலாளியை கடுமையாகத் தாக்கிவிட்டு தப்பியோடிய நிலையில், காவலாளி படுகாயமடைந்து மயங்கி ஆபத்தான நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி சமுர்த்தி வங்கியின் வளாகத்தில் திருட்டுத்தனமாக தேங்காய் பறித்தவர்களை காவலாளி அவதானிப்பதை கண்டு கொண்டமையால் காவலாளியை கடுமையாகத் தாக்கி விட்டு திருடர்கள் தப்பியோடிய நிலையில் காவலாளி உயிருக்குப் போராடிய நிலையில் அவலக்குரல் எழுப்பியுள்ளார்.

இதனையடுத்து சத்தம் கேட்டு அயலில் வசிக்கும் வைத்தியர் ஒருவர் ஓடிச்சென்று.உடனடியாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசரகால நோயாளர் காவு வண்டி சேவைக்கு தகவல் வழங்கியதையடுத்து. சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நோயாளர் காவு வண்டி மூலம் காவலாளி மீட்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், திருடர்கள் விட்டுச் சென்ற தடயப் பொருட்களை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவு இராணுவம், பொலிஸ் மற்றும் குண்டர்களால் யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டு நேற்றுடன் 36 ஆண்டுகள். இந்த நினைவு தினம் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.பொது நூலக உத்தியோகத்தர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. இதேவேளை முற்பகல் 11 மணியளவில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் பொது நூலக முன்றலில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

(படங்கள்:- உ.சாளின்)

# மகிந்தவின் பதவியேற்பில் மைத்திரி



மகாவலி அபிவிருத்தி அமைச்சின் புதிய இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த அமரவீர தனது கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் மகாவலி அபிவிருத்தி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் புதிய இராஜாங்க அமைச்சருக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி, அமைச்சில் பணிபுரிபவர்களையும் அதன் பின்னர் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி ,

மகாவலி அபிவிருத்தி துறையில் பல விரிவான வேலைத்திட்டங்கள் தற்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும்வேளையில், அச்செயற்பாடுகளை மேலும் பலப்படுத்துவதற்காக தெற்கின் வலுவானவொரு தலைவரான மகிந்த அமரவீர இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தூய்மையான அரசியல் இயக்கத்திற்கு கொள்கைப்பற்றுள்ள அரசியல்வாதிகளின் தேவைப்பாடு ஏற்பட்டுள்ளதெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி , அரசின் பயணத்தை மிகவும் பலப்படுத்தி விரிவான மற்றும் வினைத்திறனான மக்கள் சேவையை நிறைவேற்றுவதற்காகவே புதிய அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட்டதென்றும் தெரிவித்தார்.

சீரற்ற வானிலை காரணமாக அனர்த்தத்திற்குள்ளாகிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசினால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பாக இதன் போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி , எத்தகைய குற்றச்சாட்டுக்களும், விமர்சனங்களும் சுமத்தப்பட்டாலும் அனர்த்தத்திற்குள்ளான மக்களுக்கு அதிகபட்ச நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# இடிதாங்கி கொள்ளை

## நால்வர் கைது

கறுவாத்தோட்டம், பௌத்தாலோக்க மாவத்தையில் உள்ள கோடீஸ்வரர் வீட்டில் இருந்த 300 ஆண்டுகள் பழமையான இடிதாங்கியை கொள்ளையடித்துச் சென்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நான்கு பேரை கைது செய்துள்ளதாக கொழும்பு தெற்கு பிரிவின் சட்டத்தை வலுவூட்டுவதற்கான பிரிவு அறிவித்துள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களில் மற்றையவர் பொலிஸ் அதிகாரி என்றும் அவர் தற்போது தலைமறைவாக இருப்பதாகவும் அவரை தேடி வருவதாகவும் அப்பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

கோடீஸ்வரர், இந்த இடிதாங்கியை 140 மில்லியன் ரூபாய்க்கு (14 கோடி) விற்றுதருமாறு நீர்கொழும்பில் உள்ள கலைப்பொருள் விற்பனை நிலையத்தின் உரிமையாளரிடம் இதற்கு முன்னர் கேட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் அது தொடர்பில் அறிந்து வைத்துகொண்டு இடிதாங்கியை விலைக்கு வாங்க வரும் பாவனையில், அதனைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (இ-7)

# ஹற்றனில் மண்சரிவு; 60பேர் வெளியேற்றம்

ஹற்றன் நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளாரண்டன் தோட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மண் சரிவில் வீடுகள் சேதமடைந்த நிலையில், அங்குள்ள குடியிருப்புகளைச் சேர்ந்த 60 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

12 குடும்பங்கள் வசிக்கின்ற குறித்த லயன்குடியிருப்பில் மேலும் மண்மேடு சரிந்து விழும் அபாயம் நிலவுகின்ற நிலையில், மக்கள் வெளியேற்றப்பட்டு தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களது வீடுகளிலும், உறவினர்களது வீடுகளிலும் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவு பொருட்களை வழங்குவதற்கு தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த சில தினங்களாக நாடளாவிய ரீதியில் பெய்துவரும் அடைமழையினால் பேரழிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில் நுவ ரெலியா மாவட்டத்திலும்அதிக காற்றுடன் அடை மழை பெய்து வருகின்றமை குறிப்பிடதக்கது. (இ-7)

# சைட்டம் மனு மீதான விசாரணை 22இல்

(கொழும்பு)

சைட்டம் தனியார் வைத்தியக் கல்லூரிக்கு எதிராக இலங்கை மருத்துவ சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை விசாரிக்க மீயுயர் நீதிமன்றம் நேற்று முடிவு செய்துள்ளது. இதன்படி, இம்மாதம் 22ஆம் திகதி மேற்படி மனுவை விசாரிக்கவும் தீர்மானித்துள்ளது.

அட்டர்னி ஜெனரல் பிரியசாத் டெப் மற்றும் மீயுயர் நீதிமன்ற நீதியரசர்கள் பிரியந்த ஜெயவர்த்தன மற்றும் உபாலி அபேரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று இந்த மனு குறித்து விவாதிக்கப்பட்ட போதே இத்தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அனர்த்தங்களுக்கு மத்தியிலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்கின்றன-அஸ்வர்



வெள்ளம் வடிந்தும், மலைகள் சரிந்தும், கட்டடங்கள் உடைந்து போன வேளையில் கூட இன்று நாட்டின் பல இடங்களிலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்களை நாங்கள் காணக் கூடியதாக இருக்கின்றது என முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

"இதற்கொரு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். ஜனாதிபதி இதனை நேரடியாக முஸ்லிம் எம்.பிமார்கள் அனைவரையும் அழைத்துப் பேசி ஒரு தீர்வுக்கு வர வேண்டும். அதுவன்றி ஒவ்வொருவரிடத்திலும் பேசுவதன் மூலமாக இதற்கு ஒரு நாளும் தீர்வு காண முடியாது என்பதை ஜனாதிபதி நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை சமாதானப் பேரவையின் செயலாளர் ஜிஹான் பெரேரா நேற்று முன்தினம் ஊடகங்களில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூட முஸ்லிம்களுக்கு எதிராக அவிழ்த்து விடப்பட்டுள்ள வன்செயல்களை முடிவுக்கு கொண்டுவர வேண்டியது இந்த அரசாங்கத்தின் தலையாய கடமை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மே மாதத்திற்குள் முஸ்லிம்களுக்கு எதிரான 21 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த ஊடகச் செய்தி சர்வதேச ரீதியிலும் சென்றுள்ளது.

ஆகவே இந்தப் புனிதமான மாதத்தில் தறாவீஹ் போன்ற வணக்க வழிபாடுகளை எந்த பயமும் இல்லாமல் செய்வதற்கு உரிய நல்ல சூழ்நிலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்து தர வேண்டும் என முஸ்லிம் முற்போக்கு முன்னணி செயலாளர் என்ற வகையில் கேட்டுக் [illegible] தெரிவித்தார். (இ-7)

# சைட்டம் வழக்கு; நீதியரசர் விலகல்

சைட்டம்தொடர்பிலான வழக்கிலிருந்து உயர்நீதிமன்ற நீதியரசர் விஜித்கே.மலல்கொட விலகிக்கொண்டார்.

தொழில்நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவகத்தில் (சைட்டம்) மருத்துவப் பட்டம் பெறும் மாணவர்கள், இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யலாம் என, மேன்முறையீட்டு நீதிமன்றம் [illegible] தீர்ப்புக்கு எதிராக, இலங்கை மருத்துவ சபை, தாக்கல் செய்த மனு மீதான வழக்கிலிருந்தே அவர் விலகிக்கொள்வதாக நேற்று முன்தினம் அறிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால், கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி, மேற்குறித்த கட்டளையிடப்பட்டிருந்த நிலையில், அதற்கெதிராக, இலங்கை மருத்துவ சபை, உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது. அந்த மனு, உயர்நீதிமன்ற நீதியரசர்களான சிசிர ஜே டீ அப்றூ, அனில் குணரத்ன, விஜித்கே. மலல்கொட ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில், நேற்று முன்தினம் அழைக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக தான் இருந்த போதுதான் மேற்கண்ட தீர்ப்பு வழக்கப்பட்டது. ஆகையால், இந்த குழாமில் இருந்து தான் விலக்கிகொள்வதாக நீதியரசர் விஜித்கே. மலல்கொட அறிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்ததால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் இளைஞர் அணியினர் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மக்கள் மத்தியில் நேரில் சென்று நிவாரணப் பொருட்கள் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் விசேட நிர்வாக சபைக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தலைவர் சைவப் புலவர் மு.திருஞான சம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெறும்.

இந்நிர்வாக சபைக் கூட்டத்தில் சங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான முக்கிய விட யங்கள் தொடர்பான தீர்மா னங்கள் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் உபசெயலாளர் சைவப் புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (இ-3)

# பிரமிட்டால் பாதிக்கப்பட்ட ஏழு பேர் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு

பிரமிட் என்பது சட்ட விரோத நடவடிக்கையாகும். இதனை நம்பியாரும் ஏமாற வேண்டாம் என இலங்கை மத்திய வங்கியினால் அறிவுறுத்தப்பட்டு வரும் நிலையில் இதனை நம்பி ஏமாறுவோர் தொகை வடமராட்சியில் அதிகரித்து வருகின்றது.

இந் நடவடிக்கை சட்ட விரோதமானது என்பதனை அறியாத பலர் தொடர்ந்தும் அந்நிறுவனங்களுடன் தமது கொடுக்கல் வாங்கல்களைச் செய்து வருகின்றனர்.

இக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட ஏழுபேர் நேற்று வியாழக்கிழமை நெல்லியடிப் பொலிஸில் முறையிட்டுள்ளனர். (இ-60)

# யாழ்.வலய அதிபர்களுக்கு மாதாந்தக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா தலைமையில் இடம்பெறும். (இ-3-136)

# குண்டுப் புரளி கிளப்பிய இலங்கையரால் மலேசிய விமானம் மெல்பேர்னில் அவசரமாக தரையிறக்கம்

மலேசியன்எயார்லைன்ஸ் விமானத்தில் பயணித்த இலங்கையர் ஒருவர் குண்டுப் புரளி கிளப்பியதுடன் விமானியின் அறைக்குள் நுழைய முயன்றதால் விமானம் அவசரமாக மெல்பேர்ன் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

மெல்பேர்னில் இருந்து கோலாலம்பூர் சென்று கொண்டிருந்த மலேசியன் எயார்லைன்ஸ் விமானத்தில் பயணம் செய்த இலங்கையர் ஒருவர் தன்னிடம். குண்டு இருப்பதாக கூறி. விமானியின் அறைக்குள் நுழைய முயன்றார்.

இதனால். விமானி மெல்பேர்ன் விமான நிலையத்துக்கே திருப்பினார். நேற்று முன்தினம் இரவு 11.40 மணியளவில் இந்த விமானம் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மெல்பேர்ன் விமான நிலையத்தில் மீண்டும் தரையிறக்கப்பட்டது.

இதையடுத்து. குண்டுப் புரளியைக் கிளப்பிய இலங்கையர் கைது செய்யப்பட்டு பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மின்கலப்பொதி ஒன்றையே அவர் குண்டு என்று கூறி அதிகாரிகளை ஏமாற்றியுள்ளார்.

இது விமானக் கடத்தல் அல்ல என்றும் பயணி ஒருவர் விமானியின் அறைக்குள் நுழைந்து தொந்தரவு செய்ய முயன்றதால் தான் விமானம் தரையிறக்கப்பட்டதாகவும் மலேசிய போக்குவரத்து அமைச்சர் அப்துல் அசீஸ் பின் கப்ராவி தெரிவித்தார்.

ஆயுதங்களுடன் விமானத்துக்குள் நுழைந்த பாதுகாப்பு அதிகாரிகள். இலங்கையரை கைவிலங்கிட்டு பிடித்துச் சென்றனர். (இ-7)

## நிவாரணப் பொருட்கள் தெற்கிற்கு



நெல்லியடி வர்த்தக சங்கத் தினரால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் தென்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.அண்மையில் ஏற்ட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு நல்லெண்ண அடிப்படை யில் நெல்லியடி வர்த்தக சங்கத்தினால் நிவாரணப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. அவை நேற்று (01.06.2016) வாகனம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. (இ-60)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 69செவ் இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்<br>தொ.இ: B/6280 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>கி.பா: சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/சொந்ததொழில்<br>தொ.இ: G/6402 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'7"தகைமை/ தொழில்:அரசதொழில்<br>தொ.இ: B/3830 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>கி.பா: 38<br>உயரம்: 5'2'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/6406 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 18செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/உதவி கணக்காய்வாளர்<br>தொ.இ: B/4822 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/6427 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: 19<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BScEng/பொறியியலாளர்<br>தொ.இ: B/6403 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா: சூரிசெவ் 5 இல்<br>தகைமை/தொழில்: A/L/அரசதொழில்<br>தொ.இ: G/6429 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


# கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு பதவி விண்ணப்பம் கோரல். (வெளிவாரி)

01. பதவி :- சாரதி
சம்பள குறியீட்டு இல - 312/13
சம்பள அளவுத்திட்டம் :- 14230-120 x 10- 130 x 10 - 16730
(13/2015 இன் சுற்றறிக்கையின் படி E.P.F, E.T.F உட்பட ஏனைய கொடுப்பனவும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

01. 05 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப் பெட்டியுடன் டிராக்ரர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

02.- பதவி :- களஞ்சிய முகாமையாளர்
சம்பள குறீயீட்டு இல - 208/14
சம்பள அளவுத்திட்டம் :- 13875-115 x 10- 125 x 10 -16275
(13/2015 இன் சுற்றறிக்கையின் படி E.P.F, E.T.F உட்பட ஏனைய கொடுப்பனவும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

01. கூட்டுறவுப்பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

02. கூட்டுறவு பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

**பிரதான அறிவுறுத்தல்கள்**

01. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.
02. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.
03. விண்ணப்பதாரி 01.01.2017 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படதாவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டிய பிரதிகள் .
அ) தேசிய அடையாள அட்டைப்பிரதி
ஆ) பிறப்புச் சான்றிதழ் பிரதி
இ) கல்விச் சான்றிதழ் பிரதி
ஈ) வதிவிட உறுதிப் பத்திரம்
உ) நற்சான்றிதழ்

05. விண்ணப்பங்கள் சங்கத்தால் இதற்கென அச்சிடப்பட்டுள்ளது. சங்க கடமை நேரத்தில் ரூபா 10.00 செலுத்தி சங்க பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

06. தெளிவான எழுத்துக்களில் சரியான விபரங்களுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 30.06.2017 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக பதிவுத்தபால் மூலமாக கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இப்பதவி விண்ணப்பம் தொடர்பான விளக்கங்கள் தேவைப்படின் தொடர்புக்கு - 0243243483

**தலைவர் : கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை சில்க்ஸ் கட்டடத்தில் பயங்கரத்தீ

# பலகோடி ரூபாய் பொருட்கள் நாசம்

(சென்னை)

**சென்னை தியாகராயநகர் உஸ் மான் வீதியில் உள்ள சென்னை சில்க்ஸ் ஜவுளிக்கடையின் 7 மாடி கட்டடத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட் கள் எரிந்து நாசமாகின. இதனால் அந்த பகுதியே புகை மூட்டத்தால் ஸ்தம்பித்தது.**



இக்கடையின் தரைத் தளத்தில் துணிக்கடையின் பரிசுப்பொருட்கள் வழங்கும் பிரிவும் 'ஶ்ரீகுமரன் தங்க மாளிகை' நகைக்கடையும் உள்ளது.

கடையின் மொட்டை மாடியில் செயற்படும் கன்ரீனில் பணியாற்றும் ஊழியர்கள் இரவில் அங்கேயே தங்கி இருந்தார்கள். எப்போதும் காலை உணவு 8.30 மணிக்கு வழங்கப்பட வேண் டும் என்பதால், கன் ரீனிலேயே ஊழியர்கள் தங்கி, சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுவது வழக்கம். அந்த வகையில் நேற்று முன் தினம் அதிகாலை 4 மணிக்கு காலை உணவு தயாரிக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது அதிகாலை 4.15 மணி அளவில் கடையின் தரைத்தளத்தில் தீப்பொறிகள் வெடிப்பது போல சத்தம் கேட்டது. தொடர்ந்து சத்தம் கேட்டுக்கொண்டே இருந்ததால் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த ஊழியர்கள் என்னவோ, ஏதோவென்று பதறி கடையின் கதவை லேசாக திறந்து பார்த்தனர். அப்போது தரைத்தளத்தில் உள்ள பரிசு பொருட்கள் விநியோகம் செய்யும் பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்து இருந்தது.

அடுத்த சில நிமிடங்களில் புகை மேலும் தீவிரமாகி திடீரென்று கடையின் உள்ளே தீப்பிடிக்க தொடங்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த கடையின்பாதுகாவலர்கடைக்கு மேலே இருந்த கன் ரீன் ஊழியர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

உடனடியாக கடையின் நிர்வாகத்தினர், தீயணைப்பு பிரிவு மற்றும் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இதனால் தியாகராயநகர் பகுதி அதிகாலை வேளையிலேயே பரபரப்படைய தொடங்கியது.



காலை 9 மணி அளவில் புகை வெளியேற வசதியாக கடையின் முன்பக்க கண்ணாடிகள் மற்றும் விளம்பர பலகைகள் உடைக்கப்பட்டன. சரியாக காலை 9.30 மணிக்கு உஸ்மான் சாலை மற்றும் மேம்பாலம் என 2 பகுதிகளிலும் மெட்ரோ லொறிகள் நிறுத்தப்பட்டு, இராட்சத பைப் மூலம் கடைக்குள் தண்ணீர் அடிக்கப்பட்டது.

அதிகாலை 4.15 மணிக்கு பற்றி எரிய தொடங்கிய தீ, மாலை 4.15 மணி கடந்தும் குறைந்தபாடில்லை. தீயை கட்டுப்படுத்த முடியாமல் தீயணைப்பு வீரர்கள் தவித்தனர்.

மாலை 6 மணி வரை கடையின் சுவர்களில் துளை போட்டு புகையை வெளியேற்றும் முயற்சி நடந்து வந்தது. இதனால் தியாகராயநகர் பகுதி முழுவதுமே புகை மண்டலமாக காட்சி அளித்தது.

21 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த இந்த பயங்கர தீவிபத்தில் கடையில் இருந்த கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள துணிமணிகள் மற்றும் பொருட்கள் எரிந்து நாசமாகின.

என்றாலும் இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் உயிர்ச்சேதமோ அல்லது காயமோ ஏற்படவில்லை. (இ-3)

பாரதச் செய்தி

# எங்கள் கோரிக்கைக்கு ஒத்துழைத்தால் இணைவதில் நிபந்தனை இல்லை

## ஓ.பன்னீர் செல்வம் அறிவிப்பு

(சென்னை)

எங்கள் கோரிக்கைக்கு ஒத்துழைத்தால் இரு அணிகள் இணைவதில் நிபந்தனை இல்லை என்று முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்தார்.



முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கம்பம் நகரில் நேற்று நடந்த அ.தி.மு.க நிர்வாகி இல்ல திருமண விழாவில் கலந்து கொண்டார்.

அப்போது அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், கடந்த 45 ஆண்டுகளாக அ.தி.மு.கவை தொண்டர்களின் இயக்கமாகத்தான் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் நடத்தி பாதுகாத்து வந்தனர். எந்த ஒரு தனி குடும்பத்தின் ஆதிக்கத்தின் கீழ் கட்சி இருக்கக் கூடாது என்பதில் அவர்கள் உறுதியாகயிருந்தனர்.

அதேவழியைப் பின்பற்றி தான் நானும் எனது ஆதரவாளர்களும் தர்ம யுத்தத்தை தொடங்கினோம்.

தற்போது சசிகலா குடும்பத்தின் பிடியில் அ.தி.மு.க செல்லக் கூடாது, கட்சியை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் செயற்பட்டு வருகிறோம். எங்கள் கோரிக்கைக்கு ஒத்துழைக்கும் பட்சத்தில் இரு அணிகளும் இணைவதில் எந்தவித நிபந்தனையும் இல்லையென அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# தினகரனின் மறியல் நீடிப்பு

(டில்லி)

இரட்டை இலை சின்னம் பெறுவதற்காக தேர்தல் ஆணையாளருக்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் டி.டி.வி. தினகரனுக்கு எதிர்வரும் 12ஆம் திகதி வரை மறியலை நீடித்து டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



அ.தி.மு.க. அம்மா அணி துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் இரட்டை இலைச்சின்னம் பெறுவதற்காக தேர்தல் ஆணையாளருக்கு இலஞ்சம்கொடுக்க முயன்ற வழக்கில் டில்லி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் கைதான இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் டி.டி.வி. தினகரன் கைது செய்யப்பட்டார். இருவரும் டில்லி திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இருவரும் பிணை கேட்டு டில்லி மாவட்ட நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய் துள்ளனர். இந்த நிலையில் இருவரது விளக்கமறியல் காலம் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து டில்லி நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

அவர்களது மறியலை எதிர்வரும் 12ஆம் திகதி வரை மேலும் நீடித்து நீதிபதி உத்தரவிட்டார்.

இதனால் தினகரன் தொடர்ந்து திஹார் சிறையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோல் டி.டி.வி. தினகரனின் உதவியாளர் மல்லிகார்ஜுனாவின் மறியலும் இம்மாதம் 12ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# 'ஜெ' போயஸ் கார்டன் பறிமுதல்

(சென்னை)

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டை பறிமுதல் செய்வது தொடர்பாக தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாயை நீதிமன்றம் அபராதமாக விதித்தது.

அபராதம் கட்டத் தவறினால் சொத்துகளை பறிமுதல் செய்ய நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. ஏற்கனவே இந்த வழக்கில் தொடர்புடைய 128 சொத்துகளை முடக்கி வைத்துள்ளனர்.

அந்த சொத்துகளில் 68 சொத் துகளை பறிமுதல் செய்து அரசுடைமை ஆக்கும் படி நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் போயஸ கார்டன் வீடு உட்பட ஜெயலலிதா பெயரில் பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ள சொத்துகளுக்கு அவரது வாரிசுகள் மட்டுமே உரிமை கொண்டாட முடியும். அதாவது ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக், மகள் தீபா இருவரும் அதற்கு உரிமை கோர முடியும்.

அவர்கள் சட்டப்படி உரிமை கோராவிட்டாலோ அல்லது அதில் பிரச்சினைகள் ஏற்பட்டாலோ, அந்த சொத்துகளை மாநில அரசு பறி முதல் செய்ய முடியும்.

அந்தவகையில் ஜெயலலிதா வாழ்ந்த போயஸ்கார்டன் வீடும் தமிழக அரசால் பறிமுதல் செய்ய வாய் ப்பு இருப்பதாக கூறப்படு கிறது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காபூல் குண்டுவெடிப்பில் ௯0 பேர் உயிரிழப்பு!

## 400 பேர் படுகாயம்

(காபூல்)

**ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இந்தியத் தூதரகத்திற்கு அருகே நேற்று முன்தினம் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளது.**



மேலும் 400 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இந்தியத் தூதரகத்திற்கு அருகே நேற்று முன்தினம் காலை பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்தது. காபூலின் முக்கிய பகுதியான அங்கு, பலத்த பாதுகாப்புகளுக்கு இடையே, தீவிரவாதிகள் லொறி மூலம் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90-ஆக உயர்ந்துள்ளது. மேலும் பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 400-க்கும் மேற்பட்டோர் படுகாயத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குண்டுவெடிப்பைதொடர்ந்து அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது. மிகப் பெரிய அளவில் தீப்பிடித்து எரிந்தது. அந்த பகுதி முழுவதும் பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டுள்ளது. ஏராளமான கார்கள் ஆங்காங்கே நிறுத் தப்பட்டுள்ளன.

மேலும் கழிவுநீர்த் தொட்டியின் கீழ் இருந்து சுமார் 1500 கிலோ எடையிலான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆப்கா னிஸ்தானில் இதற்கு முன்பு நடத்தப்பட்ட பெரும்பாலான தாக்குதலுக்கு ஐ.எஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்றிருந்த நிலையில், இந்த தாக்குதலுக்கு எந்த அமைப் பும் பொறுப்பேற்கவில்லை.

தலிபான் தீவிரவாத அமைப்பின் கிளை அமைப்பான ஹக்கானி தீவிரவாத அமைப்பு தான் இந்த தாக்குதலுக்கு காரணம் என்று ஆப்கானிஸ்தான் உளவுத் துறை குற்றஞ்சாட்டியுள்ளது.

தீவிரவாத அமைப்புகளின் இந்தத் தாக்குதல் ஒரு போர்க்குற்றம் என்று ஆப்கான் பிரதமர் அஷ்ரப் கானி கண்டனம் தெரிவித்துள்ளார். (இ-3)






# துருக்கியில் இராணுவ ஹெலிகொப்டர் விபத்து

## 13 வீரர்கள் பலியானதாக தகவல்

(இஸ்தான்புல்)

துருக்கி - ஈராக் எல்லையில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று விபத்தில் சிக்கியதில், அதில் பயணம் செய்த இராணுவ வீரர்கள் 13 பேர் பலியானதாக துருக்கி இராணுவம் தகவல் தெரிவித்துள்ளது

துருக்கியின் வடகிழக்கு பகுதியில் இராணுவத்திற்கு சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று மின்வயர்கள் மீது மோதி விபத்திற்குள்ளானதில், அதில் பயணம் செய்த இராணுவ வீரர்கள் 13 பேர் உயிரிழந்ததாக துருக்கி இராணுவம் சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கி - ஈராக் எல்லையில் உள்ள ஶ்ரீநாக் மாகாண விமான ஏவுதளத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை சென்ற கோகர் ஹெலிகொப்டர் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விபத்தில் சிக்கியது.

விபத்து குறித்து முதற்கட்ட விசாரணை தொடங்கியுள்ள நிலையில், விபத்திற்கான காரணம் குறித்து ஆராய இராணுவ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விபத்து நடந்த இடத்திற்கு விரைந்துள்ள துருக்கி இராணுவ தலைமை பணியாளர் ஜெனரல் ஹூலூசி அகார் விபத்து குறித்து ஆய்வு செய்து வருவதாக கூறப்படுகிறது.

மீட்புப் பணிகளை மேற்கொள்ள விபத்து நிகழ்ந்த இடத்திற்கு மீட்புக்குழு ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளதாக துருக்கி ஆளுநர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (இ-3)



# இளவரசி துப்பாக்கியால் சுட்டதில் கேட்கும் திறனை இழந்த பிரதமர்

(புருசெல்ஸ்)

பெல்ஜியம் நாட்டில் விளையாட்டுப் போட்டிகளை தொடக்கி வைத்த அந்நாட்டு இளவரசி, துப்பாக்கியால் சுடும் போது வெளிவந்த சப்தம் தாங்காததால் அருகிலிருந்த பிரதமர்கேட்கும்திறனை இழந்துள்ளார். பெல்ஜியம் தலைநகர் புருசெல்சில் 20 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் பந்தயம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது.



இதைத் தொடக்கி வைப்பதற்காக அந்நாட்டு மன்னர் பிலிப்பின் இளைய சகோதரி ஆஸ்ட்ரிட் மற்றும் பிரதமர் சார்லஸ் மைக்கல் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

விளையாட்டு போட்டி தொடங்குவதற்கு அடையாளமாக இளவரசி ஆஸ்ட்ரிட் சிறிய ரக பிஸ்டல் துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டார்.

பிஸ்டலில் இருந்து வெளிவந்த சப்தம் தாங்காததால் அருகே நின்று கொண்டிருந்த பிரதமர் சார்லஸ் தன்னுடைய கேட்கும்

இதையடுத்து, பிரதமருக்கு உரிய மருத்துவச்சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் குணமடை வார் எனவும் அந்நாட்டு செய்தித் தொடர்பாளர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (இ-3)

# காபூலில் நடந்த குண்டுவெடிப்புக்கு பாக். உளவுத்துறையே காரணம்

## ஆப்கானிஸ்தான் குற்றச்சாட்டு



(காபூல்)

90 பேரை பலிகொண்ட காபூல் குண்டுவெடிப்புக்கு பாகிஸ்தானில் இயங்கும் ஹக்கானி தீவிரவாத குழுவும், அந்நாட்டு உளவுத் துறையான ஐ.எஸ்.ஐயும் காரணம் என ஆப்கானிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வெளிநாட்டுத் தூதரகங்கள் அமைந்துள்ள பகுதியில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் வெடி குண்டுகள் நிரம்பிய லொறிகளை கொண்டு தாக்குதல் நடத்தினர்.

இந்தக் கோரத்தாக்குதலில் 90 பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும், 400-க்கும் அதிகமானோர் படு காயங்களுடன் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய பிரதமர் மோடி உள்ளிட்ட உலக தலைவர்களும் தீவிரவாதிகளின் இந்தத் தாக்குதலுக்குக் கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

ஐ.எஸ் அமைப்பு அல்லது தலிபான் தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நிகழ்த்தியிருக்கலாம் என்று கணிக்கப்பட்ட நிலையில், பாகிஸ்தானை மையமாக கொண்டு இயங்கும் ஹக்கானி தீவிரவாதிகள்தான் இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு இயக்குநரகம் டுவிட்டரில் தெரிவித்துள்ளது. மேலும், ஹக்கானி குழுவுக்கு பின்னணியில் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ இருப்பதாகவும் ஆப்கானிஸ்தான் பரபரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

பாகிஸ்தனை மையமாக கொண்டுள்ள ஹக்கானி குழு, ஏற்கனவே ஆப்கானிஸ்தானில் பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளது. தலிபான்கள் மற்றும் அல்-கொய்தா அமைப்பினருடனும் இக்குழுவுக்கு தொடர்பு உண்டு. அந்நாட்டில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா மற்றும் நேட்டோ படை வீரர்களின் மீதும் ஹக்கானி குழு அதிகமான தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளது.

காபுல்தாக்குதலில்ஐ.எஸ்.ஐ மீதான ஆப்கானிஸ்தானின் குற்றச்சாட்டுக்கு பாகிஸ்தான் தரப்பிலிருந்து இன்னமும் எந்த பதிலும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (இ-3)

# இராணுவம் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் 10 பேர் பலி!

## ஒத்திகையின் போது விபரீதம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் தீவிரவாதிகளை குறிவைத்து இராணுவம் நடத்திய வான் வெளி இலக்குத் தவறிய ஒத்திகை தாக்குதலில் சொந்த வீரர்கள் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் மாராவி தீவு பகுதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி கடந்த 8 நாட்களாக பொதுமக்கள் பலரை மனிதக் கேடயங்களாக பிடித்து வைத்துள்ளனர். இவர்களை ஒடுக்குவதற்காக பிலிப்பைன்ஸ் இராணுவம் கடும் முயற்சி எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக பல்வேறு இராணுவ நடவடிக்கைகளுக்கான ஒத்திகைகள்பார்க்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில், இதே போல் ஒரு ஒத்திகையில் இராணுவ ஹெலிகொப்டரில் இருந்து வீசப்பட்ட சிறிய ரக ஏவுகணைகள் குறிதவறி சொந்த வீரர்களின் நிலைகளைத் தாக்கியது. இந்த தாக்குதலில் 10 வீரர்கள் கொல்லப்பட்டனர். 8 வீரர்கள் காயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீரர்களிடையே சரியான ஒருங்கிணைப்பு இல்லாததே இந்த மோசமான சம்பவத்திற்கு காரணம்என இராணுவ செயலாளர் டெல்பின் தெரிவித்துள்ளார். இந்த விபத்து சரியாக எந்த இடத்தில் நடந்தது என்பதை யும் அவர் கூற மறுத்துவிட்டார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனிகளை தன்னியக்க முறையில் பதிவு செய்யும் ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

கம்பனிகளை, இலத்திரனியல் அடிப்படையில் தன்னியக்க முறையில் பதிவு செய்யும் திட்டமொன்றுக்கான ஒப்பந்தம், வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அமைச்சில், அமைச்சர் றிசாத் பதியுதீன் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.



கம்பனிப்பதிவாளர்திணைக்களத்துக்கும் கே.பி.எம்.ஜீ - இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் தொடர்பான திட்டத்தை அமுல்படுத்த 57 மில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது என வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தொகையை, கம்பனிப் பதிவாளர் திணைக்களம், வரியிறுப்பாளர்களிடமிருந்து அறவிடாமல் கம்பனிப் பதிவாளர் நிதியத்திடமிருந்து பெற்று வழங்குகிறது.

இந்த புதிய திட்டம் கடந்த 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, மார்ச் இறுதியில் நிறைவுபெறுகிறது. அதன் பின்னர், ஒரே நாளில் புதிய கம்பனிகளை இலத்திரனியல் முறையின் கீழ், இணையம் மூலம் பதிவு செய்து கொள்ள முடியும்.

இதுவரை காலமும் ஒரு கம்பனியைப் பதிவு செய்வதற்கு இருந்த பல்வேறு சிரமங்கள், இந்தப் புதிய முறை மூலம் நீக்கப்படுவதோடு மாத்திரமன்றி மூன்று நாட்கள் காத்திருக்க வேண்டிய தேவையும் இல்லை.

வெளிநாடுகளில் வாழ்வோர், இலங்கையில் கம்பனியொன்றைப் பதிவு செய்ய வேண்டுமாயின் இங்கு வந்து சிரமப்பட வேண்டியிருந்த நிலை இனிமேல் இருக்காது. அவர்கள் தமது ஆவணங்களையும் கடவுச்சீட்டு மற்றும் விபரங்களையும் இணையம் மூலம் வழங்கி அவை சரிபார்க்கப்பட்ட பின், தமது கம்பனியை ஒரே நாளில் பதிவு செய்து கொள்ள இந்த புதிய திட்டம் வழிவகுக்கிறதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பாதிக்கப்பட்ட கட்டடங்களை மீளக்கட்டியெழுப்ப உப குழு

(கொழும்பு)

மீள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியை ஒதுக்கிக் கொள்வதற்காகவும் பாதிக்கப்பட்ட கட்டடங்களை மீள் நிர்மாணம் செய்வதற்கு உகந்த வேலைத் திட்டமொன்றை சிபாரிசு செய்வதற்கு அமைச்சரவை உப குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதென அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர, வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க, வியாபார அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிம் ஆகியோர் அடங்கிய அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது என்றார்.

கொழும்பில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# சீன நீர்மூழ்கிக்கு இலங்கை அனுமதி வழங்க மறுத்ததில் இந்தியத் தலையீடு இல்லை

## இந். கடற்படைத்தளபதி விளக்கம்

(கொழும்பு)

சீன நீர்மூழ்கி கொழும்பில் தரித்து செல்வதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்த விடயத்தில் இந்தியா தலையீடு செய்யவில்லை என்று இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கடற்படைத் தளபதியிடம், கடந்த மாதம் சீன நீர்மூழ்கியை கொழும்பில் தரித்து நிற்பதற்கு இலங்கை அனுமதி மறுத்த விவகாரத்தில் இந்தியாவில் செல்வாக்கு இருந்ததா? என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா, இந்த விவகாரம் தொடர்பாக இலங்கையுடன் நாங்கள் தொடர்பு கொள்ளவில்லை. அவர்கள் தாமாகவே அதனைச் செய்தார்கள் என்று தெரிவித்தார். (இ-7)

# இலங்கை உலங்கு வானூர்திகளுக்கான உதிரிப்பாகங்களை இந்தியா வழங்கியது

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் உலங்குவானூர்திகளுக்குத் தேவையான அவசர உதிரிப்பாகங்களை இந்திய விமானப்படை விநியோகித்திருப்பதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை விமானப்படை வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக தொடர் மீட்பு மற்றும் உதவிப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

இந்தப் பணிகளில் இலங்கை விமானப்படையின் எம்.ஐ-17 மற்றும் பெல் உலங்குவானூர்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



தொடர்ச்சியாக சேவையாற்றி வருவதால் உலங்குவானூர்திகள் பலவற்றில் தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் இந்திய விமானப்படையிடம் விடுக்கப்பட்ட அவசர உதவிக் கோரிக்கையை அடுத்து, இலங்கை விமானப்படையின் உலங்குவானூர்திகளுக்குத் தேவையான அவசர உதிரிப்பாகங்களை ஏற்றிக் கொண்டு இந்திய விமானப்படை விமானம் ஒன்று கடந்த 30 ஆம் திகதி மாலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்தது.

எம்.ஐ.-17 உலங்குவானூர்திகளுக்கான உதிரிப் பாகங்களே இதில் எடுத்து வரப்பட்டதாக கூறப்படுகிறது.

2009ஆம் ஆண்டு போரின் இறுதிக்கட்டத்தில் இந்திய விமானப்படை சில எம்.ஐ -17 உலங்குவானூர்திகளை இலங்கைக்கு வழங்கியிருந்தது என்று நிதின் கோகலே என்ற இந்திய ஊடகவியலாளர் தனது நூலில் எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

# தலையும் வாலும்

என் எழுத்து வேலைக்கு இடைஞ்சலாய் ஒருவர் தொடர்ந்து பல நாட்கள் டிரான்சிஸ்டரை கத்த விட்டுக் கொண்டிருந்தார். ஜாடைமாடையாகச் சொன்னதில் எந்தவிதமான பலனும் இல்லை.

அவன் தங்கியிருக்கும் இடம் அவரது முதலாளி வீடு. ஆனால் நான் நேரிடையாக முதலாளியிடம் போக விரும்ப வில்லை.

டிரானிசிஸ்டர்காரரையே போய்ப் பார்த்தேன். தன்மையாகப் பேசினேன். "நீங்கள் டிரான்சிஸ்டர் கேட்பது உங்கள் உரிமை. அதை நான் தடுக்க முடியாது. ஆனால் நான் எழுத்தாளனாக இருப்பதால் அமைதி தேவை.

மற்ற நேரம் என்றால் நானும் உங்களுடன் சேர்ந்து பற்றறி செலவில்லாமல் கேட்பேன். உங்கள் போக்கில் மாற்றம் இல்லாவிட்டால் உங்கள் முதலாளியிடம் புகார் செய்வதைத் தவிர வேறு வழியில்லை எனக்கு" என்றேன். அவ்வளவு தான். அன்று குறைக்கப்பட்ட ஒலி இன்றுவரை எனக்கு தொல்லை தரவில்லை.

இதையே நான் பெரிதுபடுத்தி ரகளை செய்து முதலாளியிடம் புகார்த் தொனி யில் பேசியிருந்தால்?

"அவன் அப்படித்தான் செய்வான். உன்னால் முடிந்ததைப் பார்த்துக்கய்யா" என்றிருப்பார். பல இடங்களில் தலையையும் வாலையும் நாம் அழகாகத் தனித்தனியே கையாள வேண்டியிருக்கிறது. இதற்கு இன்னும் உதாரணம் சொல்கிறேன்.

கிளார்க் ஒரு தவறு செய்கிறார். உங்க அலுவலகமே இப்படித்தான்யா! அத்தனை பேரும் அயோக்கியத்தனம் பண்றீங்க என்று பேசிவிட்டு மேலதிகாரியிடம் போகக்கூடாது. மேலதிகாரியும், கிளார்க்கும் ஒரே அணியில் சேர்ந்து விடுவார்கள்.

"இந்த மாதிரி செய்து நிறுவனப் பெயரைக் கெடுக்காதீங்கய்யா. உங்க மேலதிகாரிக்குத் தெரிஞ்சா எவ்வளவு வருத்தப்படுவார் தெரியுமா? மன்னிக்கவே மாட்டாருய்யா" என்கிற தொனியில் பேசித் தலையையும் வாலையும் துண்டிக்க வேண்டும்.

உறவினர்களுக்குள் சண்டை. இதிலும் கணவன், மனைவி ஒரே அணியில் சேர்ந்துவிடக் கூடாது. இதில் இவர்களைப் பிரிக்கிறோமே என்ற கேள்வியே எழாது.

கணவன் உணரத் தவறிய நியாயத்தை மனைவியும் மனைவி உணரத் தவறிய நியாயத்தை கணவனும் ஒரு' வருக்கொருவர் உணர்த்த வேண்டும் என நாம் விரும்புகிறோம். இது நடக்க வேண்டுமானால் இருவருமே நமக்கு எதிராகத் திரும்பி விடாதபடி பார்த்துக் கொள்ளத்தான் வேண்டும்.

சர்வர் தவறு செய்துவிட்டார். நேரே ஹோட்டல் மேலாளரிடம் போய், "ஹோட்டலாயா நடத்துறீங்க?" என்று ஆரம்பித்துவிடக் கூடாது. இப்படி ஆரம்பித்தோம் என்றால் நமக்குப் பரிந்து பேச ஆள் இராது. "இதுதான் சேர் நடந்தது. உங்களுக்குச் சரின்னு பட்டா சொல்லுங்க" என்று ஆரம்பிக்க வேண்டும்.

வார்த்தைகள் ஏகமாக விட்டுவிட்டால் அவையே பகையாகி நமக்கெதிராக ஏகப்பட்ட பேரை ஒன்று சேர்த்து விடும். நமக்கென்று பரிந்து பேசவும், நாம் நியாயம் கேட்கவும் இடமிருக்க வேண்டும். இதற்குத் தலைகளைத் தன்வசப்படுத்தியாக வேண்டும். தலையையும் வாலையையும் ஒன்று சேர இடம் கொடுத்தீர்கள். நம்மை ஒரு வழி பண்ணிவிடுவார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

ஆசிரியர் வே.அன்பழகன்

(31. 05. 2017 அன்று பிரசுரிக்கப்பட்ட பகுதி-1 வினாக்களின் தொடர்ச்சி)

♦ 29 தொடக்கம் 34 வரையான வினாக்களுக்குச் சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

29) நான் பத்து ரூபாய் வைத்திருக்கிறேன். எனது தம்பி என்னிலும் இருமடங்கு வைத்திருக்கிறான். அவன் எனக்கு எத்தனை ரூபாய் தந்தால் இருவரும் சமமான தொகை வைத்திருப்போம். (..........................................)

30) ஒலிம்பிக் விளையாட்டு விழா நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும். இறுதியாக ஒலிம்பிக் விளையாட்டு விழா கடந்த வருடம் நடைபெற்றது. அடுத்த ஒலிம்பிக் விழா எவ்வாண்டில் நடைபெறும்? (..............................)

31) ஹரி ரூபாய் 14.50 இற்கு அப்பியாசப்புத்தகங்களை வாங்கி 20 ரூபாய்த் தாள் ஒன்றை வியாபாரியிடம் கொடுத்தான். மீதிப்பணமாக ஹரிக்கு இரண்டு ரூபாய் நாணயம் 1 உம் ஒரு ரூபாய் நாணயம் 1 உம் 50 சத நாணயங்கள் சிலவும் கிடைத்தன. ஹரிக்கு கிடைத்த 50 சத நாணயங்கள் எத்தனை?
(..........................................)

32) எனது நண்பர்களும் நானும் தீபாவளி வாழ்த்திதழ்களைப் பரிமாறிக்கொண்டோம். இதன் பொருட்டு நாம் ஒவ்வொருவரும் மற்றைய ஒவ்வொருவருக்கும் வாழ்த்திதழை அனுப்பினோம். நாம் பயன்படுத்திய மொத்த வாழ்த்திதழ்கள் 30 ஆகும். எனக்கு எத்தனை நண்பர்கள் உள்ளனர்.
(..........................................)

33) இன்று புதன் கிழமை. நாளை மறு நாள் 25 ஆம் திகதி. சென்ற் வெள்ளிக்கிழமை அமுதன் தனது பிறந்த தினம் நேற்று என்று கூறினான். அமுதன் வாரத்தில் எந்த நாளிற் பிறந்தான் எனவும் அவனின் பிறந்த திகதி எதுவெனவும் எழுதுக.
(..........................................)


34) அம்மாவும் அக்காவும் இருப்பது எனது இடது பக்கத்திலாகும். அக்கா இருப்பது அம்மாவின் வலதுபக்கத்திலாகும். அதன்படி நடுவில் இருப்பது. (.......................)

35) பின்வரும் சொற்கள் எழுதப்பட்டுள்ளது ஒரு ஒழுங்கு முறைக்கேற்பவாகும்.
செக்கன்- நிமிடம் -மணித்தியாலம் - ........................ - வாரம்
அதன்படி இடைவெளிக்கு வரவேண்டிய சொல்.
1) வருடம் 2) மாதம் 3) நாள்

36) மாலாவிடம் மஞ்சள். சிவப்பு. நீலம் நிறங்களிலான சட்டைகள் மட்டும் உள்ளன. சித்திராவிடம் வெள்ளை. சிவப்பு நிறங்களைத் தவிர்ந்த ஏனைய நிறங்களிலான சட்டைகள் உள்ளன. கமலாவிடம் நீலம், கறுப்பு நிறங்களைத் தவிர்ந்த ஏனைய நிறங்களிலான சட்டைகள் உள்ளன. அதனப்படி மூவரிடமும் உள்ளது.
1) செம்மஞ்சள் நிறச் சட்டைகள் 2) மஞ்சள் நிறச் சட்டைகள் 3) நீலநிறச் சட்டைகள்

37) வியாபாரி ஒருவர் இரண்டு பால்மாப் பக்கற்றுக்களை கொள்வனவு செய்யும் ஒருவருக்கு 5 இனிப்புகளை இலவசமாகக் கொடுப்பார். பால்மாப் பக்கற்றுக்களை கொள்வனவு செய்த ஒருவருக்கு 15 இனிப்புகள் இலவசமாகக் கிடைத்தன. அதன்படி அவர் கொள்வனவு செய்த பால்மாப் பக்கற்றுக்களின் எண்ணிக்கை.
1) 6 2) 3 3) 4

பின்வரும் உருக்களின் வரிசையைப் பரிசீலித்து இலக்கம் 38, 39 ஆகிய வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.



38) மேலே உருக்களில் வரிசையில் காணக்கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கை.
1) 04 2) 06 3) 05

39) மேலே உருக்களின் வரிசையில் காணக்கிடைக்கும் வட்டங்களின் எண்ணிக்கை
1) 03 2) 05 3) 04

40) அப்பா வீட்டிற்குக் கொண்டுவந்த முட்டைகளில் $\frac{1}{2}$ பங்கு உடைந்திருந்தது. மீதியாக இருந்த முட்டைகளில் $\frac{1}{2}$ பங்கு பழுதடைந்திருந்தது. பழுதடையாத முட்டைகளின் எண்ணிக்கை 4 எனின் அப்பா கொண்டுவந்த மொத்த முட்டைகளின் எண்ணிக்கை.
1) 08) 2) 16 3) 32

## வினாத்தாள் பகுதி-2

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்குரிய விடையைப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.

முல்லைக்கொடியின் பரிதாப நிலையக்கண்ட பாரி தேரை நிறுத்தினான். கொழுகொம்பொன்றைத் தேடி அங்குமிங்கும் அலைந்தான். அக்கொடி படர்வதற்கேற்ற கொம்பு எங்கு தேடியும் கிடைக்கவில்லை. இதன் வாட்டத்தைக் கண்டு இதற்கு உதவி செய்யாமல் தான் செல்லுதல் அழகோ! கேட்போருக்கு இல்லையெனாது கொடுக்கும் யான். இச்சிறு கொடிக்கு உதவும் வகையறியாமல் தவிக்கிறேன்! என்று வேதனை அடைந்தான்.

1. பாரி எதனைத் தேடி அலைந்தான்? ..............................
2. பந்தியிலிருந்து இணைமொழிச் சொல் ஒன்று எழுதுக. ..............................
3. "இரதம்" என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. ..............................
4. விசிறி. மடக்கேறு. அரவு ஆகியன வந்த சொல்லை எழுதுக. ..............................
5. மலர்ச்சி என்பதன் எதிர்ப்பதம் யாது? ..............................
6. தன்மை. ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று தருக. ..............................

02) பாடலைப் பூர்த்தி செய்க.

நன்மை செய்பவரே -உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
..........................................

03) பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.
1. ஐயோ என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா
2. என் நண்பனிடம் ஆந்தைகளுக்கு இரவில் கண் தெரியுமா என்று கேட்டார்.


04) அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
1. பிள்ளை தன் பெற்றோரை.............. (அறிந்து / அரிந்து) தெரிந்து நடத்தல் வேண்டும்.
2. மத்திய ................(மழை / மலை ) நாட்டில் தேயிலை நன்கு வளரும்.
3. தரம் ஐந்து மாணவர்களினது பாடப்பரப்பானது ..............(பரந்து / பறந்து) காணப்பட்டது


05) (1) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.
1. பச்சைக்கிளி .................. 2. காவியுடை ........................
(2) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.
1. மரம் + வேர் ................. 2. மண் + குடம் ......................

06) வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
1) தமிழ் மொழியில் ................... மெய் எழுத்துக்கள் உள்ளன. (பன்னிரண்டு. இருநூற்றுப்பதினேழு. பதினெட்டு)
2. தசரதன் தனது குருவான .................... முனிவரின் ஆலோசனைப்படி புத்திரப் பேற்றை விரும்பி யாகம் செய்தான். ( கௌசிக. வசிட்ட. அகத்திய )
3. தோமஸ் அல்வா எடிசன் அமெரிக்காவிலுள்ள ............ நகரில் பிறந்தார். (மிலான், அயோத்தி, கிரேக்கம்)
4. மழை பெய்ததால் பயிர்கள் செழித்து ................ (வளர்ந்தது/ வளர்ந்தன)
5. சபரி குடிசைக்குள் சென்று நீர் கொண்டு .............. (வந்தாள்/ வந்தார்)

07) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.
1) Let's draw a picture. ..............................................
2) I love my country. ..............................................
3) Is it near the table ? ..............................................

08) பின்வரும் ஒவ்வொரு உருவுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.


.........................


.........................

09) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.
1. உங்களுடைய ஊர் எது? ..............................................
2. மணி அடிக்கிறது ..............................................

10) பின்வரும் வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.
1. தொஸ்தர என்னே கீயட்டத? ..............................................
2. வெஹெந்தா (B)படுகிரனவா? ..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-2

ஆசிரியர் வே.அன்பழகன்

11) நீர் உமது வீட்டுத் தோட்டத்தில் சில கத்தரிச் செடிகளை நாட்டினீர். அதற்கு தினமும் நீர் ஊற்றி பராமரித்து வந்தீர். சில நாட்களில் செடி வளர்ந்து பூத்தது. அதில் சிறிய பிஞ்சு ஒன்று முதன்முதலில் தோன்றியது. அதைப் பார்த்தபோது உமக்கு ஏற்பட்ட உணர்வுகளை மூன்று வாக்கியங்களில் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் சரியாக இருத்தல் வேண்டும்)

1 ......................................................................................

2 ......................................................................................

3 ......................................................................................

12) பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

1. CFL மின்குமிழ்களை பயன்படுத்துவதனால் எமக்குக் கிடைக்கும் பிரதான நன்மை.
   1) வெள்ளை நிற ஒளி கிடைத்தல் 2) மின்வலு குறைவாகச் செல்லல்
   3) மிகக்கூடிய ஒளியைப் பெற்றுத்தரல் 4) மின்குமிழ்களை நீண்ட காலம் பயன்படுத்த முடிதல்
2. அவசர அறிவித்தல் தொடர்பாக பொலீஸிற்கு அறிவிக்க வேண்டிய இலக்கம்.
   1) 129 2) 911 3) 119 4) 191
3. பனிக்கட்டி ஒன்றை கரையாமல் வைத்துக்கொள்வதற்கு பனிக்கட்டியை வைக்கவேண்டியது.
   1) பலகைப் பெட்டியில் 2) இரும்புப் பெட்டியில்
   3) கண்ணாடிப் பெட்டியில் 4) ரெஜிபோம் பெட்டியில்
4. மாத்தறை நகருக்கு அருகில் கடலுடன் கலக்கும் நதி.
   1) களனி கங்கை 2) நில்வள கங்கை 3) மகாவலிகங்கை 4) களுகங்கை
5. உடையக்கூடிய கண்ணாடிப்பொருட்கள் அடுக்கப்பட்டுள்ள பெட்டியொன்றின் வெளிப்பகுதியில் காணக்கிடைக்கும் இலட்சினை.




1) 2) 3) 4)

6. "கொழும்பு நகரை வாழ வைக்கும்
   கோடி உயிரைக் காத்து நிற்கும் ............" இப்பாடல் சிறப்பிக்கும் நதி எது?
   1) மகாவலி கங்கை 2) களனி கங்கை 3) களுகங்கை 4) ஜின்கங்கை
7. 
   இக்குறியீடு குறிப்பது.
   1) மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடியது 2) கவனமாகக் கையாளுதல்
   2) இலங்கை கட்டளைகள் பணியகம் 4) சிற்றுண்டிச்சாலை
8. உணவு சமைக்கும்போது அவ்வுணவை சுவையூட்டப் பயன்படும் தாவர இலை.
   1) அகத்தி 2) வேம்பு 3) வல்லாரை 4) கறிவேப்பிலை
9. SLDA தரநிர்ணயச் சான்றை எந்தப் பொருளில் காணலாம்?
   1) மின்குமிழ் 2) சவர்க்காரம் 3) பற்பசை 4) தீப்பெட்டி
10. விரைவில் நஞ்சாகக்கூடிய மரக்கறி.
   1) மரவள்ளி 2) கத்தரி 3) வெண்டி 4) கோவா
11. இலங்கையில் உள்ள அழகிய நீர்வீழ்ச்சி எது?
   1) துன்கிந்த 2) பம்பரகந்த 3) விக்டோரியா 4) லக்சபானா
12. மின்குமிழைக் கண்டுபிடித்தவர்.
   1) மார்க்கோனி 2) சார்ள்ஸ் பபேஜ் 3) நியூட்டன் 4) தோமஸ் அல்வா எடிசன்
13. மரங்களின் தண்டுகளில் ஒட்டி வளரும் தாவரம் எது?
   1) கொய்யா 2) குருவிச்சை 3) இஞ்சி 4) மரவள்ளி
14. உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுகள் அடங்கிய தொகுதி எது?
   1) சோறு, பலாக்காய், இடியப்பம், பாண் 2) வல்லாரை, பசளி, வெண்டி, தக்காளி
   3) மாம்பழம், தோடம், பலாப்பழம், அன்னாசி 4) பால், சோயா, அவரை, பயறு
15. இயற்கையின் உழவாளி என அழைக்கப்படும் பிராணி எது?
   1) எறும்பு 2) மண்புழு 3) கறையான் 4) காகம்
16. நீலம், மஞ்சள் ஆகிய வர்ணங்களை சம அளவில் கலந்து பெறப்படும் நிறம்.
   1) ஊதா 2) செம்மஞ்சள் 3) பச்சை 4) கபிலம்
17. மொத்த சில்லறை வியாபார நிலையம் ஒன்றில் கட்டாயமாக இருக்கவேண்டியது.
   1) பெயர்ப்பட்டியல் 2) பொருட்பட்டியல் 3) விலைப்பட்டியல் 4) சம்பளப்பட்டியல்
18. கூட்டெரு தயாரிக்கப் பயன்படுத்தாதது.
   1) இலை, குழைகள் 2) ஆட்டெரு 3) கோழி எரு 4) அமோனியா
19. பின்வரும் இசைக்கருவிகளில் துளைக்கருவி வகையைச் சேர்ந்தது.
   1) வயலின் 2) தவில் 3) மகுடி 4) தாளம்
20. உயரமான கட்டடங்கள் உள்ள இடங்களில் இடி மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப் பொருத்தமானது.
   1) மின்னல்தாங்கி 2) இடிதாங்கி 3) அலைதாங்கி 4) சுனாமி எச்சரிக்கை
21. இலத்திரனியல் ஊடகங்களில் ஒன்று.
   1) மின்னஞ்சல் 2) துண்டுப்பிரசுரம் 3) பத்திரிகை 4) நூல்கள்
22. முதற்தர தேயிலையினை குளிர்ந்த நீரில் இட்டுப் பரிசோதித்த போது உண்டான நிறம்.
   1) சிவப்பு 2) கபிலம் 3) இளமஞ்சள் 4) காவி
23. நாற்று மேடைகள் அமைத்து அதன் மூலம் புதிய கன்றுகளைப் பெறக்கூடிய தாவரம்
   1) மரவள்ளி 2) கத்தரி 3) வெண்டி 4) பாகல்
24. கடந்த வருடம் ஒலிம்பிக் நடந்த நாடு.
   1) இங்கிலாந்து 2) ஆர்ஜென்ரீனா 3) பிறேசில் 4) தென்கொரியா
25. இங்கையின் தேசிய இலட்சினையுடன் தொடர்புடையது அல்லாதது.
   1) அரசமிலை 2) மலரிதழ் 3) நெற்கதிர் 4) நிறைகலசம்

13) பின்வரும் பிரசினங்களைத் தீர்க்குக.

அ) தரப்பட்டுள்ள எண்ணைச் சொற்களில் எழுதுக.
39090 ......................................................

ஆ) இலக்கத்தில் எழுதுக.
அறுபத்தெட்டாயிரத்து முந்நூற்று ஐம்பது ......................................

2. உரோமன் இலக்கத்தில் எழுதுக.
   அ) பத்தொன்பது ............................ ஆ) பதின்மூன்று ........................
3. 150 ml குளிர் பானத்தை 2 பேருக்கு வழங்கலாம் எனின் 9 பேருக்கு வழங்கத் தேவையான குளிர்பானத்தின் அளவு? ..............................................ml
4. 3 kg 750 g தேயிலையிலிருந்து எத்தனை $\frac{1}{4}$ kg கொண்ட தேயிலைப் பக்கற்றுக்களைத் தயாரிக்கலாம்? ..............................................
5. 

   அ) அருகில் தரப்பட்ட உருவின் சுற்றளவு யாது? ....................
   ஆ) உருவினுள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன? ....................
6. தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி 6 இன் மடங்குகளை அட்டவணையில் ஒழுங்கு முறையாக எழுதுக.

35, 24, 38, 18, 28, 21, 30, 15, 12

| | | | | |
|---|---|---|---|---|
| 6 இன் மடங்கு | | | | |

## 19.05.2017 வெள்ளி அன்று பிரசுரிக்கப்பட்ட பகுதி-2 இன் விடைகள்

1) 1. சுப்பிரமணிய பாரதியார்
   2. சிறந்த / சுவை நிறைந்த
   3. பாடினார் / அழைப்பர்
   4. பாடினார்
   5. பாடல்கள்
   6. இளமை

2) 1. கோபம் சிந்தனைக்கு இடையூறு
   2. திறமைசாலி சிறு பொருளைப் பயன்படுத்தியேனும் முன்னேறுவான்

3) 1. இணக்கம் காட்டுதல்
   2. ஆபத்துவேளையில் கைவிடல்

4) 1. தீர்க்கதரிசி
   2. வேட்பாளர்

5) 1. முடித்தான்
   2. எய்தான்
   3. வைத்தாள்
   4. இயற்றப்பட்டது
   5. சென்றோம்

6) 1. கிளை
   2. அறிய

7) 1. peacock 2. Bottle

8) 1. குரங்கு 2. வகுப்பறை
   3. உனக்குப் பிடித்திருக்கிறதா?

9) 1. புத்தகத்தைத் தாருங்கள்
   2. குடியுங்கள்
   3. பாடுங்கள்

10) 1. தொண்ணூற்றொன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது
   2. 202, 2011, 2042, 22072
   3. 10000
   4. 191 முட்டைகள்
   5. 366 ஆண் மாணவர்கள்
   6. 608 ஆரம்பக்கல்விப்பிரிவு அல்லாதவர்
   7. 6433 மாணவர்கள்
   8. 634 அதிகம்
   9. ரூபாய் 17.50
   10. 10 m 50 cm
   11. 625 மாபிள்கள்
   12. 306 தேங்காய்கள்
   13. 5 பொதிகள்
   14. 510 வளையல்கள்
   15. XIV
   16. 30 பலூன்கள்
   17. 1) 575 2) 2081
   18. ரூபாய் 12.00

11) பொருத்தமான வாக்கியங்கள்

12)

| | | |
|---|---|---|
| 1. 2 | 11. 2 | 21. 3 |
| 2. 3 | 12. 2 | 22. 4 |
| 3. 4 | 13. 3 | 23. 4 |
| 4. 2 | 14. 4 | 24. 1 |
| 5. 3 | 15. 4 | 25. 3 |
| 6. 3 | 16. 2 | |
| 7. 4 | 17. 3 | |
| 8. 3 | 18. 3 | |
| 9. 3 | 19. 2 | |
| 10. 4 | 20. 2 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைச் சொல் கேளாதவர்



சென்ற வைகாசி மாதம் மூன்று நாட்கள் நாகர் கோயிலில் (கன்னியாகுமரி மாவட்டம்) அனைத்துலகத் திருக்குறள் மாநாடு நடைபெற்றது.

ஏறக்குறைய பத்து நாடுகளிலிருந்து ஆய்வாளர்கள் கலந்துகொண்டனர். இந்தியாவிலிருந்து பல ஆய்வாளர்கள் கலந்து சிறப்பித்தனர். இலங்கையிலிருந்து நானும் எனது கணவரும் கலந்துகொண்டோம்.

ஆய்வு மாநாடு என்ற வகையில் அதனைத் திட்டமிட்டு சென்னை ஆசியக் கற்கை நிறுவகமும் மொரிசியஸ் உலகப் புலம்பெயர்ந்தோர் மன்றமும் இணைந்து சிறப்பாக அரங்கேற்றியிருந்தன.

150 இற்கு மேற்பட்ட திருக்குறள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் அங்கு பொது அரங்குகளிலும் குழுநிலை அரங்குகளிலும் படிக்கப்பட்டன. இவை மாநாட்டின் தேவையையும் இலக்கினையும் வையகத்திற்குச் சிறப்பாகவே எடுத்து இயம்பின. மாநாட்டின் கருப்பொருளும் 'திருக்குறளின் உலகப் பொதுமை' என்ற கோட்பாட்டையே எடுத்துரைப்பதாக வரையறை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடவேண்டியதொன்றாகும்.

அனைத்துலகத் திருக்குறள் மாநாடு என்ற வகையில் திருக்குறள் மாநாடு அமைவதற்கு அதன் பல்வேறு நாட்டு மொழிகளின் மொழிபெயர்ப்புகளும் ஒரு சிறப்பான காரணமாக அமைந்திருந்தன.

தமிழின் செம்மொழி இலக்கியமான திருக்குறள் 90இற்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகளைக் கொண்ட தனிப்பெருமை படைத்த தமிழ் நூலாகவும் விளங்குகிறது.

ஆங்கில மொழியில் மட்டும் ஏறக்குறைய 40 மொழிபெயர்ப்புகள் திருக்குறளுக்குச் செய்யப்பட்டுள்ளன. இது திருக்குறளின் ஆழமான பொருளை எடுத்துரைக்க ஆங்கில மொழியின் ஆற்றல் போதாமல் இருப்பதையும் மறைமுகமாகச் சுட்டிநிற்கிறது.

ஏனைய நாட்டு மொழிபெயர்ப்புகளும் இப்போது ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து அந்தந்த நாட்டு மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டவையாகவே பெரும்பாலும் உள்ளன.

ஆனால் 21 ஆம் நூற்றாண்டு இந்நிலையை மாற்றும் சிறப்பான நூற்றாண்டாக விளங்குகிறது. குறிப்பாக வையகமெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் இளைய தலைமுறை தத்தம் வாழிட மொழியிலே உயர் கல்வியைக் கற்ற புலமையாளர்களாக உருவாகியுள்ளனர்.

அவர்கள் தமது தாய் மொழியையும் தொடர்ந்து 12 ஆண்டுகள் கற்றுத் திறமையாகத் தேர்ச்சியும் பெற்று உள்ளனர். அதனால் திருக்குறளை மூல மொழியிலே கற்கும் அரிய வாய்ப்பினையும் பெற்றுள்ளனர்.

எனவே இதுவரை வெளிவந்த திருக்குறள் மொழிபெயர்ப்புகளின் குறைகளைக் களையவும் நிறைகளை எடுத்துரைக்கவும் வல்லுநர்கள் பலர் தோன்றிவிட்டார்கள்.

இந்நிலையில் சென்ற மாதம் அனைத்துலகத் திருக்குறள் மாநாட்டில் ஒரு சிறப்பான நிகழ்வும் அரங்கேறியது. வள்ளுவரின் குறட்பாக்களை மனப்பதிவு செய்து கற்பிக்க, ஒரு சிறுவன் தன் ஆற்றலைப் பொது அரங்கிலே அமைதியாக ஆற்றுகை செய்தான். திருக்குறளின் அதிகாரப் பெயரைக் கூறி அதன் உள்ளடக்கமான குறட்பாக்களையும் தனது மழலைக் குரலிலே தவறின்றி அழகாக ஒப்புவித்தான்.

1330 குறட்பாக்களையும் அச்சேற்றியது போல அவன் மனதிலே பதிவு செய்து வைத்திருக்கிறான். வள்ளுவர் குறள் வாய்மொழியாகவே பல காலமாகப் பயிற்றப்பட்ட நிலைக்கு அச்சிறுவன் சான்றாக அரங்கிலே நின்ற கோலம் அனைவரையும் கவர்ந்தது.

எட்டு வயதான சிறுவன். சிவசஞ்சைய் என்ற அழகிய பெயர் பெற்றவன். ஆண்டு மூன்றிலே பள்ளியில் பயிலும் இளம் பிஞ்சு. அவனால் அவன் கற்கும் பெல்ஃபீல்டு மெட்ரிக் பள்ளி பெருமையுடன் ஆசாரிப்பள்ளத்திலே தலைநிமிர்ந்து நிற்கிறது. திருக்குறளை அவன் மனப்பதிவு செய்யப் பயிற்றியவள் அவனைக் கருவிலே சுமந்து பெற்றெடுத்த தாய் ராதா. அவன் ஆற்றல் கண்டு தந்தை பொன்.சுபாஸை எல்லோரும் வியந்து நோக்கினர்.

சிவசஞ்சைய் வாழும் வைரவா குடியிருப்பு உள்ள எறும்புக்காடு என்னும் ஒரு சிற்றூர் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளது. திருக்குறளைக் கற்க இச்சிறுவனின் பயில்நெறி சிறப்பாக வழிகாட்டுகிறது.

தமிழ்நாட்டிலே 1330 குறட்பாக்களையும் மனப்பதிவு செய்துள்ளவர்களாக ஏறக்குறைய 20 சிறுவர் உள்ளனர். அவர்களில் இம் மாநாட்டில் தன் திறனை அரங்கேற்றிய சிறுவனின் குடும்பத்தையே இன்று எல்லோரும் காண விழைவர்.

இவ்வாறு எதிர்காலத்தில் பல சிறுவர் உருவாக வேண்டும் அதுவே உலகப்பொதுமறை தந்த வள்ளுவர் பணியை எல்லோரும் தொடர ஒரு நல்வழி ஆகும்.

முனைவர்
மனோன்மணி
சண்முகதாஸ்

## நூற்றாண்டு விழா ஏற்பாட்டுக் கூட்டம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் எம்.சி.சுப்பிரமணியத்தின் நூற்றாண்டு விழா ஏற்பாட்டுக் கூட்டம் நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். சன்மார்க்க சனசமூக நிலைய மண்டபத்தில் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் தலைவர் சட்டத்தரணி பி.ஜே.அன்ரனி தலைமையில் இடம்பெறும் என அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் பொதுச் செயலாளர் கி.கமலேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-7)

## இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் கௌரவிப்பு நிகழ்வு

கல்வி, கலை, ஊடகம், சமூகம் சார்ந்த துறைக்காக தேசாபிமானி விருதுக்கான நிகழ்வு யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலாநிதி நாகலிங்கம் தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கௌரவிப்பு நிகழ்வு கண்டி மலையக கலாசார சங்கம் ஆதரவில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நடராஜன் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினர்களாக பேராசிரியர் க.தேவராசா, வைரமுத்து வாமதேவன் ஆகியோரும் விசேட விருந்தினர்களாக எஸ்.சதீஸ்குமார் (ஜே.பி.), கலாபூஷணம் எம்.டி.எகபூர் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-3)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1090

Search for people, places and things   Nagendram   Home

**நர்மதன்**




**மதனா**




**குலம்**




**வினோத்**




**சீதா**




**நிர்மலரூபன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறைகேள் அரங்கு...

## 2006ம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அதிபர்களுக்கு விமோசனம் கிடைக்குமா?


ஓய்வூதிய வேறுபாடு காலத்துக்குக்காலம் சரி செய்யப்பட்டுள்ளது. சம்பள வுயர்வு, ஓய்வூதிய உயர்வு கள் பலருக்கு ஒரு நாள், ஒரு வாரம், மாதம் வேறுபாட்டில் கிடைக்காமல் போவது சரி செய்யப்படுவ தில்லை.

உதாரணமாக 12 மாதத்தில் வருடாவருடம் கிடைக்கும் சம்பள உயர்வு கிடைக்காது போகிறது. இதனை புத்திஜீவிகள் கண்டுகொள்வதில்லை. இது முன்பு நடைமுறையில்இருந்துவந்துள்ளது.

2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு விண்ணப்பப்பத்திர மூலம் விபரம் கோறப் பட்டு நிலுவையும் கிடைத்துள் ளது. இது பாராட்டுக்குரியது. இதேபோன்று 2004, 2005 ஓய்வூதியம் பெற்றவர்கள் தவறவிடப்பட்டது ஏன்?

அவர்களும் 2006 இற்குப் பின் ஓய்வு பெற்றவர்கள் போன்று பாதிப்புடையவர்கள் இல்லையா? பல போராட்டங்கள், கோரிக்கைகள் சமர்ப்பித்தும் இதுவரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

ஓய்வுநிலை அதிபர்



காரைநகர் துறைமுகம் முத்து விநாயகர் ஆலயத் திருப்பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. ஆலயத்தின் 33 அடி உயர மூலஸ்தான தூபியும் கடவுள்களின் சந்நிதிகள் யாவும் கருங்கற்களினால் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

## இரு மோ.சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து மூவர் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியிலுள்ள மூத்த விநாயகர் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்ற இவ் விபத்தில் கரணவாய் மேற்கைச் சேர்ந்த கதிரவேல் செந்தூரன் (வயது - 37), வியாபாரி மூலையைச் சேர்ந்த லட்சுமி காந்தன் தர்சன் (வயது -28), இன்பருட்டியைச் சேர்ந்த சிவச்செல்வன்



வைகுந்தன் (வயது - 28) ஆகியோரே படுகாயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-60)



காரைநகர் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும் வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளருமான பொன்.சிவானந்தராசாவின் மணிவிழா நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காரைநகர் இந்துக்கல்லூரியில் அதிபர் சிவந்தினி வாகீசன் தலைமையில் இடம்பெற்றது. 38 வருட கால ஆசிரிய சேவையினையும் நான்காண்டுகள் காரைநகர் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய அவரது சேவையினைப் பாராட்டி கல்லூரி சமூகத்தினர் அவருக்கான பாராட்டு விழாவினை நடத்தினர். (படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொரியா உதவி

அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொரியா உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது. மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு கொரியா 300.000 அமெரிக் டொலர்களை உதவியாக வழங்கவுள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுடன் துயரைப் பகிர்ந்து கொள்வதாகவும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை வெளியிட்டு கொள்வதாகவும் கொரிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொரிய அரசாங்கத்தின் சார்பில் இலங்கைக்கான கொரிய தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது. கூடாரங்கள் உள்ளிட்ட பொருட்களுக்காக இவ்வாறு 300.000 டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (இ-7)

## பொலித்தீன் அற்ற சுற்றாடலை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம்





யாழ். சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய சமூகத்தினரால் உலக சுற்றாடல் தினம் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் பாடசாலையின் சூழலிலுள்ள பிளாஸ்ரிக், பொலித்தீன்கள் சிரமதானம் மூலம் அகற்றப்பட்டு இவற்றின் பாவனையை முற்றாக இல்லாமல் செய்வதற்கான சத்தியப்பிரமாணம் எடுக்கப்பட்டது. திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான ஆலோசனைகள் ஆசிரியர்களினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு திண்மக் கழிவுகளும் அகற்றப்பட்டுள்ளன. மேலும் பயன்தரும் 10 மரக்கன்றுகளும் பாடசாலைச் சூழலில் நடப்பட்டுள்ளன. (இ-5-108)

## மத முரண்பாடுகளைக் களைவதற்கு மதத்தலைவர்கள் இணையவேண்டும்

### ஜனாதிபதி மைத்திரி அழைப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்படும் மத முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக உரியவாறு சட்டத்தை அமுல்படுத்துவதுடன், அந்த முரண்பாடுகளை ஏற்படுத்தும் தரப்பினருக்கு விடயங்களைத் தெளிவுபடுத்தக்கூடிய பொது செயற்றிட்டத்தின் தேவையை ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

அதற்காக அனைத்து மதத் தலைவர்களும் ஒரே அரங்குக்கு வர வேண்டும் எனவும் தெரிவித்த ஜனாதிபதி நாட்டில் ஒற்றுமையின்மையை விதைக்கும் இன,மத வேறுபாடுகளுக்கு இடமளிக்கக் கூடாதெனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மதங்களுக்கிடையிலான ஆலோசனைப் பேரவைக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்படும் மத முரண்பாடுகள் தொடர்பில் அந்தந்த மாவட்ட மட்டத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதற்காக தனது ஆலோசனைக்கமைய அரசியல்வாதிகள் மற்றும் மதத் தலைவர்களை உள்ளடக்கிய குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அக் குழுவை மிகவும் வினைத்திறனாக செயற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

அத்துடன், மதங்களுக்கிடையிலான ஆலோசனைப் பேரவை ஆகக்குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையாவது கூட்டப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி இந்த கலந்துரையாடலில் முன்வைக்கப்படும் கருத்துக்களின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய



தொடர் நடவடிக்கை தொடர்பான விசேட விதந்துரைகளை தான் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்படும் இன, மத முரண்பாடுகளின் போது நடுநிலையாகவும், பக்கச் சார்பற்றும் செயற்படுவது அனைவரதும் பொறுப்பாகும் என தெரிவித்த ஜனாதிபதி அனைத்து மத, இன மக்களும் மகிழ்ச்சியாக வாழக் கூடிய சமாதானமான நாட்டையே அனைவரும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி மதத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அலுவலர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளிலுள்ளோர் நன்கொடை வழங்குவதற்கான வங்கிக்கணக்கு

## நிதி அமைச்சால் அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள இல ங்கையர்கள் இலங்கையில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன் கொடைகளை வழங்க முன் வந்திருப்பதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நன்கொடைகளை இலகுவாக வழங்கக்கூடிய நடவடிக்கைகளை அரசா ங்கம் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக வெளி நாடுகளில் இருப்போர் தமது நிதிநன்கொடையை வைப்பி லிட சம்பத் வங்கியின் விசேட ஐந்து வைப்பீட்டு கணக்கு களை அரசாங்கம் ஆரம்பித் துள்ளது. இந்தக் கணக்குக ளில் தமது நன்கொடை பண த்தை வெளிநாட்டிலிருப்போர் வைப்பீடு செய்யமுடியும். இந்த வங்கிக்கான SWIFT குறியீடு BSAMLKLX என்பதாகும்.

வைப்பீடு செய்வதற்கான கணக்கு இலக்கங்கள்

1. அமெரிக்க டொலர் (USD) - 5029 6000 2000

2. ஸ்ரேலிங் பவுன் (GBP) - 5029 6100 2000

3. ஜப்பான ஜென் (SPY) - 5029 6400 2000

4. அவுஸ்திரேலிய டொலர் (AUD) - 5029 6600 2000

5. யூரோக்கள் (EUR) - 5029 6900 2000.

இவ்வாறு வழங்கப்படும் நன்கொடைகள் அனைத்தும் அனர்த்தத்தினால் பாதிக்கப்ப ட்ட மக்களின் சொத்துக் களை புனரமைப்பதற்கான அரசாங்கத்தின் வேலைத் திட்டத்திற்கும் மற்றும் தேவை க்கேற்றவகையில் நிவாரண நடவடிக்கைகளுக்காக பயன் படுத்தப்படும் என நிதியமைச்சு மேலும் அறிவித்துள் ளது. (இ-7)




# இயற்கை அனர்த்தங்களால் இதுவரை கல்வித்துறையில் ஏற்பட்ட இழப்புகள்

**44 மாணவர்கள் மரணம்**
**8 மாணவர்கள் மாயம்**
**144 பாடசாலைகள் சேதம்**
**7,850 மாணவர்கள் நிர்க்கதி**
**72 பாடசாலைகளில் முகாம்**

"இயற்கை அனர்த்தங்க ளினால், சப்ரகமுவ, தென் மற்றும் மேல் ஆகிய மாகா ணங்களைச் சேர்ந்த 44 மாணவர்கள் மரணமடைந் துள்ளனர். அத்துடன், மாண வர்கள் எட்டுப்பேரைக் காண வில்லை" என்று, கல்வியமை ச்சர் அகிலவிராஜ் காரிய வசம் தெரிவித்தார்.

இந்த அனர்த்தங்களி னால் 144 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. அதில் 74 பாடசாலைகள் முழுமை யாகவும் 70 பாடசாலைகள் பகுதியளவிலும் சேதமடைந் துள்ளன.

இதனால், 7,850 மாண வர்கள் நிர்க்கதியாகி உள்ள துடன், 72 பாடசாலைகள் முகாம்களாகவும் நிவாரண முகாம்களாகவும் உள்ளன என்றும் அவர் கூறினார்.

பத்தரமுல்லையில் உள்ள கல்வியமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் கல ந்துகொண்டு கருத்து தெரி வித்த போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"மாணவர்களுக்கு அப் பால், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் பாதிக்கப்பட்டு ள்ளனர். மேற்படி மூன்று மாகா ணங்களிலும், 150 அதிபர் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள் ளனர்" என்றும் அவர் தெரி வித்தார்.

"இதேவேளை, சேதமடை ந்த பாடசாலைகளை மீள வும் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை முன் னெடுப்பது தொடர்பில் தற் போது ஆலோசனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மூன்று சிறுமிகள் மீதான வன்கொடுமையை கண்டித்து வாழைச்சேனையில் நேற்று பேரணி



திருகோணமலை மூதூர் மல்லிகைத்தீவில் கடந்த 28ஆம் திகதி மூன்று சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வாழைச்சேனை பொது அமைப்புக்களால் கண்டனப் பேரணி நேற்று நடத்தப்பட்டது. இந்தப் பேரணி வாழைச்சேனை மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி 10.30 மணியளவில் வாழைச்சேனை பொலிஸ் நிலையம் வரை பிரதான வீதி வழியாக பேரணி சென்றடைந்தது. பேரணிக்கு ஆதரவாக சிவில் அமைப்புக்கள், பெற்றோர்கள், பெண்கள் சமூக அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது. இதில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனும் கலந்து கொண்டிருந்தார்.

# நாடாளுமன்ற வளாகத்தில் அதிகாரிகளை தகாத வார்த்தைகளால் திட்டியவர் கைது

(கொழும்பு)

நாடாளுமன்ற வளாகத் தில் வைத்து, அதிகாரிகளை தகாத வார்த்தைகளால் திட் டியதுடன் மிகவும் அசாதா ரண முறையில் நடந்துகொ ண்ட ஒருவரை, நாடாளும ன்ற பொலிஸார் கைதுசெய்து தம்மிடம் ஒப்படைத்துள்ள [illegible] வெளிக்கள பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம், 30 திகதி மாலையில் இடம்பெற்று என்று நாடாளுமன்ற வளா கத்தில் ஜயவர்தனபுர பிர தான பாதுகாப்பு வாயிலின் ஊடாகவே குறித்த நபர், நுழைந்துள்ளார் என, ஆர ம்ப கட்ட விசாரணைகளி லிருந்து அறியமுடிகின்றது.

அங்கு வந்ததும், குறித்த நபர் அங்கிருந்த அதிகாரி களை தகாத வார்த்தைக ளால் திட்டியதுடன், மிகவும் அசாதாரணமான முறை யில் நடந்துகொண்டுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத் துக்குள் அவர், என்ன நோக் கத்துக்காக நுழைந்துள் ளார் என்பது தொடர்பி லும் விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளதாக வெலி க்கடை பொலிஸார் தெரிவித் தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர் தினம்

## -சிறப்புக் கட்டுரை-

(நேற்றைய தொடர்ச்சி)

### நேர முகாமை ஒரு புண்ணியம்

ஒழுக்கம் போன்றே நாம் இன்று முகம்கொடுக்கும் மற்றுமோர் பிரச்சினை நேர முகாமையாகும். நேர முகாமைக்கு சுய கட்டுப்பாடு அவசியமாகும். பிள்ளைகள் எல்லா செயற்பாடுகளிலும் நேரமுகாமையின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். நேரத்தை சரியாக முகாமை செய்வதனூடாக எமது ஆற்றுகைகளை சிறப்பாக ஆற்றுவதுடன் பிறர் நேரத்தையும் பெறுமதியையும் மதிக்கின்றோம்.

ஒரு பிள்ளையின் வரவை எதிர்பார்த்து வகுப்பு உரிய நேரத்தில் ஆரம்பிக் காவிட்டால் அனைவரும் விரயமாக்கப்பட்ட நேரத்தால் பாதிப்புறுகின்றனர். வகுப்பு உரிய நேரத்தில் ஆரம்பித்தால் வகுப்பிற்கு பிந்திச் செல்லும் பிள்ளை மட்டும் இழப்புக்களை சந்திக்கின்றது.

வளர்ந்தவர்களாகிய நாம் அதுவும் முக்கிய பதவிகளை வகிப்பவர்களாயின் ஒரு நிமிடமோ, 10 நிமிடமோ அல்லது 3 மணித்தியாலங்களோ காலதாமதமாகி ஒரு நிகழ்விற்கு செல்வோமாயின் நாம் அங்குள்ளவர்கள் மட்டில் எவ்வித மதிப்பும் கொண்டிருக்கவில்லை என்பதே வெளிப்படையாகும். நீங்கள் அந்த நிகழ்வை மட்டுமல்ல அங்குள்ளவர்களின் ஏனைய வேலைகளையும் குழப்புகின்றீர்கள் என்பதே உண்மை. நேரத்தை சரியாக முகாமை செய்யாதவர்கள் தம்மளவில் ஒழுங்கற்றவர்கள், அவர்கள் ஒரு நிறுவனத்தின் வினைத்திறனான செயற்பாடுகளுக்குப் பொருத்தமற்றவர்கள்.



யாழ். ஆயர்
மேதகு கலாநிதி. யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்
(B.Th (Pune),M.A (Hull),PhD in Ed (Southampton)

நேரம் தவறாமை என்பது சுய கட்டுப்பாட்டின் மறுவுருவமே. மற்றவர்களுக்கு தர்மம் கொடுப்பதைவிட, நேரம் தவறாது நடந்து மற்றவர்கள் நேரத்தை மதிப்பதே பெரும் புண்ணியமாகும்.

நேரம் தவறாமை தொடர்பில் இன்னுமோர் முக்கிய விடயம் மற்றவர்களின் கடிதங்கள், மனுக்களுக்கு உடன் பதிலளிப்பதாகும். ஏனெனில் இந்த மனுவை, கடிதத்தை அனுப்பியவர் உங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பார். மறைந்த முன்னாள் யாழ். ஆயர் மேன்மை தங்கிய தியோகுப்பிள்ளை அவர்கள் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதிலளிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்.

கணனிகள் அற்ற அந்தக் காலப் பகுதியில் தட்டச்சுப்பொறி மூலம் இரவு நெடுநேரம் விழித்திருந்து அன்றைய தினத்திற்கான கடிதங்களிற்குரிய பதிலை தானே வரைவதை பார்த்து வியந்துள்ளேன். அந்த உன்னதமான ஆயரின் சிறப்பான இந்த பண்பை நானும் கடைப்பிடிக்க வேண்டும் என்றே விரும்புகின்றேன்.

ஆயினும் எனது வேலைப் பளு காரணமாக அதிலும் ஆயராக பணியேற்ற பின்பு மேன்மை மிக்க முன்னாள் ஆயரின் மேற்படி பண்பை இன்னும் நெருங்கிச் செல்ல முடியாமல் இடர்படுகின்றேன்.

இலங்கையின் தொழில் தர்மம் அல்லது ஒழுக்கம், குறைந்த வேலையைச் செய்து அதிக ஊதியத்தை எதிர்பார்ப்பதாகவே உள்ளது. அதிலும் மிக மோசமான விடயம் யாதெனில் எங்காவது தவறு நடந்தால் அந் நிறுவனத் தலைவர் பிழையை ஏற்பதையோ அல்லது சீர் செய்வதையோ விட அதை சமாளிக்கவே முனைகின்றார். சில சந்தர்ப்பங்களில் தன் கீழ் பணிபுரிவோர் தலையில் தவறுக்கான பொறுப்பை சுமத்தி விடுகின்றார்.

பல நிறுவனங்களில் வாடிக்கையாளர்கள் அல்லது சேவை பெறுவோர் காத்திருக்க ஊழியர்கள் உணவோ, தேநீரோ அருந்திக் கொண்டிருப்பதையோ அல்லது தனிப்பட்ட உரையாடலில் ஈடுபட்டிருப்பதையோ அவதானிக்கலாம். இது எமது நிறுவனங்களின், அலுவலகங்களின் வினைத்திறன் இன்மையைக் காட்டுகின்றது.

கல்விச்சாலைகளின் இலக்கு வாழ்வின் பல்வேறு துறைகளில் தொழில் ஒழுக்கமுள்ள, வாண்மை மிக்க சேவையாளர்களை உருவாக்குவதாகவே அமைய வேண்டும். எப்போதும் கற்பதற்கு-பயில்வதற்கு ஆர்வமுள்ள, சுயாதீனமாக சிந்திக்கும் திறன் மிக்க, புறவயமான-ஆக்க பூர்வமான முடிவுகளை மேற்கொள்ளும் நேர்மனப் பாங்கு மிக்க மனிதர்களை உருவாக்குவதே பாடசாலைகளின், பல்கலைக்கழகங்களின் முதன்மைப் பணியாக வேண்டும். இப்படியான அறிவு, திறன், மனப்பாங்குள்ள மனிதர்கள் இலங்கையின் இன்றைய யதார்த்த நிலைகளூடாக உருவாவாகுவது கடினமான தொன்றுதான். ஆயினும் அப்படியானவர்கள் விலை மதிப்பற்ற முத்துக்கள் போன்றவர்கள். அவர்களை தம்முடன் இணைக்க நிறுவனங்கள் போட்டியிடும் நிலையேற்படும்.

கல்வியின் நோக்கு பிள்ளைகளுக்கு எதை சிந்திக்க வேண்டுமென்று போதிப்பதல்ல. மாறாக எப்படி சிந்திக்க வேண்டுமென்று வழிகாட்டுவதே. பிள்ளைகள் மனனம் செய்து தம் மூளைகளை நிரப்புவதை விட அவர்கள் தம் சிந்தனையாற்றலை மேம்படுத்த வழி சமைக்கப்பட வேண்டும். மாணவருக்கு ஏதாவதொன்றை கற்பிப்பதை விட ஏதாவதொன்றை செய்து பார்ப்பதற்கு சந்தர்ப்பமளியுங்கள். அதன் மூலம் இயல்பாகவே அவர்கள் சுயமாக சிந்திக்க கற்கத் தலைப்படுவார்கள்.

இறுதியாக புனித பிரான்சிஸ் அசிசி அவர்களின் செபத்துடன் என்னுரையை நிறைவு செய்கின்றேன்.

இறைவா!
என்னை உம் சமாதானத்தின் கருவியாக்கியருளும்.
எங்கு பகையுள்ளதோ அங்கு அன்பையும்
எங்கு குற்றமுள்ளதோ அங்கு மன்னிப்பையும்
எங்கு பிளவு உள்ளதோ அங்கு ஒற்றுமையையும்
எங்கு தவறு உள்ளதோ அங்கு உண்மையையும்
எங்கு சந்தேகம் உள்ளதோ அங்கு விசுவாசத்தையும்
எங்கு விரக்தி உள்ளதோ அங்கு நம்பிக்கையையும்
எங்கு இருள் உள்ளதோ அங்கு ஒளியையும்
எங்குத்துன்பம் உள்ளதோ அங்கு மகிழ்ச்சியையும்
நான் பரப்பிட அருள் தாரும்.
இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தமிழாக்கம்
எப்.எக்ஸ்.அன்ரன்

# மரண தண்டனைக் கைதிகளுக்கு ஆங்கில அறிவு பெற விருப்பம்

## நிறைவேற்றிய சிறைச்சாலை அதிகாரி

(கொழும்பு)

தங்களுக்கு ஆங்கில அறிவு பெற்றுக் கொள்ள விருப்பம் உள்ளமையினால் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு வெலிக்கடை சிறைச்சாலையின் மரண தண்டனை கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மரண தண்டனை கைதிகளின் கோரிக்கைக்கமைய அவர்களுக்காக ஆங்கில பாடநெறியை ஆரம்பித்துள்ளதாக வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரி சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட வைத்தியர் உட்பட சிறைக்கைதிகள் நான்கு பேர் இந்த பாடநெறியின் ஆலோசகர்களாக செயற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பாடநெறிக்கு அவசியமான புத்தகம் பல்வேறு நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் இவ்வாறான பாடநெறி ஒன்று வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ள போதிலும் மரண தண்டனை விதிக்கப்பட்ட நபர்களுக்காக நடத்தப்படுகின்ற முதலாவது படநெறி இது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நீதி நிலைநாட்டப்படவில்லை அமைச்சர் சம்பிக்க அறிக்கை

வெள்ளவத்தை கட்டடம் இடிந்து விழுந்ததில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படவில்லை என பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, சட்டவிரோத கட்டடங்களுக்கு எதிராக எழுந்து நிற்கும் மக்கள் இயக்கமொன்று தற்பொழு நாட்டுக்கு தேவையாக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த கட்டட உரிமையாளருக்கு ஒரு சிறு காலத்தில் பிணை வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக கவலை வெளியிடுவதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 120 | 160 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 80 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 450 | 450 | 500 | 500 |
| தக்காளி | 160 | 140 | 100 | 120 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 150 | 80 | 100 | 70 |
| கோவா | 160 | 250 | 130 | 160 | 200 | 160 |
| கரட் | 200 | 400 | 200 | 240 | 400 | 350 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 | 100 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 300 | 300 | 300 | 160-300 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 400 | 140 | 200 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 120 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 100 | 160 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 90 | 100 | 160 | 120 |
| பீற்றூட் | 120 | 160 | 100 | 120 | 160 | 130 |
| கறிமிளகாய் | 250 | 300 | 100 | 100 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 60 | 100 | 80 | 100 |
| போஞ்சி | 200 | 250 | 150 | 240 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 100 | 160 | 200 | 120 |
| கீரை-1பிடி | 40 | 20 | 20 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 50 | 50 | 40 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 70 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 400 | — | 220 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 250 | — | — | — | 140 |
| முள்ளங்கி | 80 | 100 | — | 80 | 200 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 10 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | 160 | — | — | — | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்ட உள்நோக்கத்தோடு கூறப்படும் ஓர் உண்மை ஆயிரம் பொய்களை விட மோசமானதாகும்.

*~ சார்லஸ் ருபி பிளேக்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சந்திரிகா மட்டுமல்ல; அந்த ஈசன் சொன்னாலும்...

காணாமல்போனவர்கள் தொடர்பில் எந்த விசாரணையும் செய்ய முடியாது என வடக்கின் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கூறியிருக்கையில், காணாமல்போனவர்கள் கொலை செய்யப் பட்டிருக்கலாம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

காணாமல்போனவர்கள் உயிருடன் இருப் பார்கள் எனத் தான் நம்பவில்லை என்பது சந் திரிகா குமாரதுங்கவின் கருத்தாக உள்ளது.

இக்கருத்தையே இந்த நாட்டின் ஆட்சியாளர் கள் சொல்ல நினைத்தாலும் அதனை அவர் கள் வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் இருக்கின்றனர்.

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அதில் ஒன்று காணாமல்போனவர்களின் உறவுகள் இன்றுவரை தமது பிள்ளைகள் உயிரோடு இருப்பதாகவே நம்புகின்றனர். அதற்கு அவர்கள் வலுவான ஆதாரங்களை முன்வைக்கின்றனர்.

அதாவது எங்கள் பிள்ளைகளை இராணு வத்தினரிடம் ஒப்படைத்துள்ளோம். பிள்ளைக ளைப் படையினரிடம் ஒப்படைத்தபோது மதத் தலைவர்கள் குறிப்பாக கத்தோலிக்க அருட் தந்தையர்கள் உடனிருந்துள்ளனர்.

இராணுவ அதிகாரிகள், பொறுப்பதிகாரி கள் எனப் பலரின் முன்னிலையில் ஒப்படைக் கப்பட்ட எங்கள் பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள் இவர்கள் எங்கே? என்பதுதான் காணாமல்போனவர்களின் பெற்றோர் - உறவி னர்கள் கேட்கும் கேள்வி.

படையினரிடம் சரணடைந்தவர்கள் அல் லது படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை போரில் காணாமல்போனவர்கள் என்று ஒரு போதும் குறிப்பிட முடியாது.

அவர்களைப் படையினர் சிறையில் அடைத்தோ அல்லது முகாம்களில் தடுத்தோ வைத்திருக்க வேண்டும்.

அவ்வாறு அவர்கள் இல்லை என்றால், அவர்களைப் படையினர் கொன்று விட்டனர் என்பது பொருளாகும்.

பாதுகாப்பார்கள் என்று நம்பி படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது சரணடைந்த பிள்ளை களுக்கு நடந்தது என்ன? என்பதை தெரியப் படுத்துவது அரசாங்கத்தின் தார்மீகக் கடமை.

எனினும் காணாமல்போனவர்கள் கொல் லப்பட்டிருக்கலாம் என்று சொல்பவர்கள் யார் கொன்றார்கள் என்ற கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் தத்தளிக்கின்றனர்.

இதனால் அவர்களின் பதில்கள் முன்னுக் குப்பின் முரணானதாக உள்ளது.

தவிர இரண்டாவது காரணம் காணாமல் போனவர்கள் கொல்லப்பட்டு விட்டனர் என்றால் அந்த உத்தரவை வழங்கியது யார்? எங்கு வைத்து கொல்லப்பட்டார்கள்? அவர்களின் உடல் எங்கே புதைக்கப்பட்டது? இப்படியான பல கேள்விகள் முன்னெழும்.

இதனால்தான் காணாமல்போனவர்கள் தொடர்பில் விசாரணை எதுவும் நடத்த முடி யாது என வடக்கின் ஆளுநர் கூறியுள்ளார்.

இது ஆளுநரால் கூறப்பட்டதா? அல்லது ஆளுநரைக் கொண்டு கூறப்பட்டதா? என்ற வாதப் பிரதிவாதங்கள் புறம்பாக நடத்தப்பட வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில், முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார், காணா மல்போனவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறுகிறார். அவர் கூறுவதை காணா மல்போனவர்களின் உறவுகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

ஏனெனில் அவர்களின் கேள்வியெல்லாம் எப்படிக் கொல்லப்பட முடியும்? எங்கள் பிள்ளை களை படையினரிடம் ஒப்படைத்ததற்கு கண் கண்ட சாட்சி உள்ளதல்லவா? என்பதுதான்.

ஆக, காணாமல்போனவர்கள் கொல்லப் பட்டுவிட்டனர் என்பதை நிரூபிக்க பல உண்மை களை அரசாங்கம் சொல்லித்தான் ஆக வேண்டும்.

இல்லையேல் சந்திரிகா அல்ல; சாட்சாத் ஈஸ்வரன் வந்து சொன்னாலும் காணாமல் போனவர்களின் உறவுகள் அதை ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். இது சர்வ நிச்சயம்.

# புத்தாண்டு விழா

யாழ். கொட்டடி கிராம அபி விருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நட த்தும் புத்தாண்டுவிழா நாளை சனிக்கிழமை கொட்டடி சன சமூக நிலைய கட்டட முன்ற லில் மாலை 6.30 மணிக்கு லயன்கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில்நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதமவிரு ந்தினராக யாழ்.பல்கலைக்க ழக துணைவேந்தர் பேரா சிரியர் இ.விக்னேஸ்வரன், சிறப்புவிருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை வாழ்நாள் பேராசிரி யர் ச.சத்தியசீலன் , வடமா காண சபை உறுப்பினர் விந் தன் கனகரத்தினம், யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் த.தீலிபன் ஆகி யோரும் கௌரவ விருந்தி னர்களாக யாழ். பிரதேச செய லகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.அன்ரூ, யாழ். மாநகரசபை பொது சன தொடர்பு உத்தியோகத் தர் ச.லோகசிவம், கொட்டடி ஜே/83 கிராம அலுவலர், திரு மதி.கோபிகாசாலினி ஆகியோ ரும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் சமூக தில கம், கொடை ஞானச்சுடர் சன சமூக நிலைய சேவையாளர் ஆகிய விருது வழங்கும் நிகழ் வும் 2016 ஆம் ஆண்டு நடை பெற்ற தரம் 5 புலமைப்பரி சில் பரீட்சை, க.பொ.த. உயர் தரப் பரீட்சை, க.பொ.த. சாதா ரண பரீட்சை, நிலையத்தி னால் நடத்தப்பட்ட பொது அறிவு போட்டிப்பரீட்சை, மர தன் ஓட்டம் ஆகியவற்றில் வெற்றி பெற்றமாணவர்களுக் கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறும். இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக கலைக்கா வோரி, நாட்டிய தாரகை, எம்.ஏ. உதயகுமார் குழுவினர் வழங் கும் நடன நிகழ்வும் பல்குரல் (மிமிக்கிரி நிகழ்வு) என்பன நடைபெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (இ-5-107)

# மஹோற்சவம்

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மஹோற்சவம் இன்று 2 ஆம் திகதி வெள்ளிக்கி ழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 9 தினங்கள் இடம்பெறவுள் ளன. (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை **யாழ். பிரதே சத்தில்** நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, சாரை யடி, கிராமக்கோடு, பருத்தித் துறை நகரம், V.M வீதி, கல்லூரி வீதி, தம்பசிட்டி, சாளம்பை, பனைவள ஆராய ச்சி நிலையம் கைதடி, கைதடி யுனைடட் மோட் டர்ஸ் கைதடி வடமாகாண சபை அலுவலகம், தோப்பு, அச்சுவேலி, செல்வநாயக புரம், பலாலி தெற்கு, அச்சு வேலி வைத்தியசாலை, விஜிதா மில், பத்தமேனி, பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், புத் தூர், வீரவாணி, ஊரணி, வாதரவத்தை, ஆவரங்கால், அச்சுவேலி, கைத்தொழிற் பேட்டை, நவக்கிரி, சுதந்திர புரம், குட்டியப்புலம், சிறுப்பி ட்டி ஒரு பகுதி ஆகிய இடங் களிலும் **வவுனியா பிரதேசத் தில்** குருமன்காடு, வைரவ புளியங்குளம், ஆதி விநாய கர் கோவில்ப்பிரதேசம், UNHCR குருமன்காடு, அர சன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** முருங்கன் பிட்டி, மாவிலங்கேணி, பிடாரிக்குளம், அளவக்கை, வாழ்க்கைப்பட்டான் கண டல், பள்ளங்கோட்டை, நானாட்டான், சாளம்பன், நாகசெட்டி, எருவிட்டான், அறுகுக்குன்று, நொச்சிக் குளம, அச்சங்குளம், டொன் பொஸ்கோ ஆகிய பிரதேச ங்களிலும் மின் தடைப்ப டும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சேவையின் அருளாசி (பலன்)

நீ சேவை செய்யும் பொழுது நீ யாருக்கோ உதவி செய்வதாக நினைக்காதே. உன்னுடைய சேவை உனக்கு உடனடியாகப் பலனைத் தந்து விடுகிறது. நீ பலன் பெறுவது உறுதி மற்றும் நீ செய்வதை விட அதிகமான பலனையே நீ எப்பொழுதும் பெறுகிறாய்.

நீ பலனை எதிர்பார்த்து உன்னுடைய சேவையைக் கூலி வேலை ஆக்கி விடுகிறது. நான் நிறையச் செய்துவிட்டேன் என நீ நினைத்தால் நீ குறைவாகவே செய்வாய். நீ கொஞ்சம் தான் செய்திருக்கிறாய் என நினைத்தால் நீ இன்னும் அதிகமாகச் சேவை செய்வாய்.

சேவை என்பது உடனே எந்தப் பலனும் கிடைக்கா விடினும் புலம்பாமலிருப்பது; கூலி வேலை என்பது உடனே பலனைப் பெற்ற பிறகும் கூடக் குற்றஞ்சாட்டுவது, புலம்புவது.

சேவை செய்ய எந்தவிதமான வாய்ப்புக்கிடைத்தாலும் நீ நன்றியோடு இரு.

## நீர் வெறுப்பு நோய் தடுப்போம்!

சிறுவர்கள் வாழும் சூழலிலும் விளையாடும் சூழலிலும் காணப்படும் நாய்களுக்கு விலங்கின் விசர் தடுப்பு மருந்தினை அளிக்க வேண்டியது பெற்றோரின் பொறுப்பாகும்.

**செல்லப்பிராணிகளை கட்டாக்காலிகளாக அலையவிடவேண்டாம்.**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# வீதியைப் புனரமைக்குமாறு கட்டுடை மக்கள் கோரிக்கை

(கட்டுடை)

மானிப்பாய் மேற்கு கட் டுடை அரசடி விநாயகர் ஆல யத்திற்கு செல்லும் வீதியா னது மிக நீண்டகாலமாக செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதாக அப்பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தின் மானிப் பாய்மேற்கு கட்டுடை சந்தியி லிருந்து கட்டுடை சைவ வித்தி யாசாலை செல்லும் வீதி கட ந்த வருடம் புனரமைப்பு செய்யப்பட்டது.

ஆனால் இவ்வீதியினூ டாக பிரிந்து செல்லும் ஒரு கிலோ மீற்றர் நீளமான ஆலய வீதி செப்பனிடப்படாமல் உள் ளது.

இவ்ஆலய வீதியை ஊட றுத்து சேதமடைந்த பால மும் காணப்படுவதனால் மழை காலங்களில் பல சிர மங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்த னர்.

எனவே உரிய அதிகாரி கள் கவனத்தில் கொண்டு ஆலய வீதியை புனரமை த்து த்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-102)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### நினைத்தது கைகூட ஒவ்வொரு நாளும் கடவுளை வழிபடுங்கள்

வாரத்தில் உள்ள ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கடவுளுக்கு உரியதாக கருதப்படுகிறது. எனவே ஒவ் வொரு நாளும் அந்த நாட்களுக்குரிய கடவுகளை தரிசித்து வழிபடுவது சிறந்தது.

திங்கட்கிழமை சிவனுக்கு உகந்த நாள். எனவே திங்கட்கிழமை நீலகண்டனுக்கு விரதமிருந்து, சிவ பெருமானுக்கு பால், அரிசி மற்றும் சர்க்கரை படைக்க வேண்டும்.

செவ்வாய்க்கிழமை அனுமன் மற்றும் துர்க்கை அம்ம னுக்கும் மிகவும் உகந்த நாளாகும். எனவே செவ்வாய்க் கிழமைகளில் விரதமிருந்து ராகு காலத்தில் எலுமிச்சை விளக்கு போட்டு வந்தால், வாழ்க்கை வளம் பெரும்.

புதன்கிழமை விநாயகப்பெருமானுக்கு உகந்தது. எனவே புதன்கிழமை அன்று விநாயகர் கடவுளுக்கு விரதமிருந்து வழிபட்டு வந்தால், எந்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும்.

வியாழன் கிழமை தட்சணாமூர்த்தி, விஷ்ணு மற்றும் விஷ்ணு பகவானின் மனைவியான லக்ஷ்மி தேவி ஆகிய கடவுளுக்கு உகந்தது. எனவே வியாழக் கிழமை அன்று இந்த கடவுளுக்கு விரதம்இருந்து வழிபட வேண்டும்.

வெள்ளிக்கிழமை துர்க்கை அம்மனையும் அவரது அவதாரங்களையும் வெள்ளிக்கிழமை விரதமிருந்து வழிபட வேண்டும். இந்த நாளில் அம்மனின் அனை த்து அவதாரங்களையும் ஒன்றாகவும் வழிபடுவது மிகவும் சிறந்தது.

சனிக்கிழமை சனிக்கிரகத்தை சார்ந்ததாகும். சனிக் கிழமைகளில் விரதமிருந்து சனி பகவான், பெருமாள், ஆஞ்சநேயர் மற்றும் காளிதேவியை வழிபட்டால், வாழ் க்கை சிறப்பாக இருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை நவக்கிரகத்தின் முதன்மைக் கடவுளான சூரிய பகவானை ஞாயிறு அன்று விரதமி ருந்து வழிபடுவது உகந்தது. இதனால் சூரிய தோஷம் மற்றும் வாழ்க்கையில் உள்ள இன்னல்கள் தீரும்.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### நன்றியுள்ளவர் யார்?

❖ செயல்கள் அனைத்தின் விளைவுகளும் எண் ணத்தைப் பொறுத்தே அமைகின்றன. மனிதன் எதை எண்ணுகிறானோ, அதற்குரிய பலன் தான் அவனுக்குக் கிட்டும்.

❖ இறைவன் உங்கள் உருவங்களையோ, செல் வங்களையோ பார்ப்பதில்லை. உள்ளங்களையும், செயல்களையும் மட்டுமே பார்க்கிறான்.

❖ உங்களின் நெஞ்சங்களில் இருப்பவற்றை நீங்கள் மறைத்தாலும் அல்லது அவற்றை வெளிப்படுத் தினாலும் இறைவன் அவற்றை நன்கறிகிறான்.

❖ பிறரைவிடக் கூடுதலாக உலக வசதிகளைப் பெற வேண்டும் என்னும் எண்ணம் உங்களை மெய் மறதியில் ஆழ்த்தி வைத்திருக்கிறது... நீங்கள் மண் ணறைகளைச் சென்றடையும் வரையில்!

❖ இரு விடயங்கள் ஒருவனிடமிருந்தால் அவனை நன்றி உள்ளவன் என்றும், பொறுமை உள்ளவன் என்றும் இறைவன் குறித்துக் கொள்வான். 1. உலக வசதி களைப் பொறுத்த வரையில் தன்னை விடக் கீழான வரைப் பார்த்து இறைவனுக்கு நன்றி செலுத்துதல். 2. இருப்பதைக் கொண்டு திருப்தி கொள்ளுதல்.

**-வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடத்தல்தீவு ஐக்கிய வி.கழகம் நடத்தும் 44 ஆவது நினைவு கால்பந்தாட்டத் தொடர்

## சம்பியனானது பொதுசன அணி




மன்னார் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம்தமது 44ஆவது வருட நினைவையொட்டி மாபெரும் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியினை மன்னார் லீக்கின் அனுமதியுடன் நடத்தியது.

இதில் மன்னார் லீக்கில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களில் 36 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

இந்த சுற்றுப் போட்டியானது கடந்த 25ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு நாட்கள் விடத்தல்தீவு பிரதேச சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் பங்குபற்றிய அணிகள் A, B என இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு விலகல் முறையில் போட்டிகள் நடைபெற்றன.

**காலிறுதிச் சுற்று**

குழு A யில் முதலாவது காலிறுதிப் போட்டியில் மன்னாரின் நடப்பு சம்பியன் பள்ளிமுனை சென்.லூசியா அணியை எதிர்த்து தோட்டவெளி ஐக்கிய அணி மோதியது. இதில் இரண்டு அணிகளும் போட்டி நேர முடிவின்போது எதுவித கோல்களையும் போடாத காரணத்தினால் சமனிலை தவிர்ப்பு உதை (பனால்டி) மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் தோட்டவெளி ஐக்கிய அணியானது 4:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

A குழுவின் இரண்டாவது காலிறுதிப் போட்டியில் விடத்தல்தீவு புதிய ஐக்கிய அணியை எதிர்த்து முருங்கன் பொதுசன சேவைகள் அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரண்டு அணிகளும் எதுவித கோலினையும் போடாததால் சமனிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் முருங்கன் பொதுசன சேவைகள் அணி 4:3 எனும் கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது. B குழுவின் முதலாவது காலிறுதிப் போட்டியில் காத்தாங்குளம் சென். ஜோசப் அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கிய அணி மோதியது. இதன் முதல் பாதியில் ஐக்கிய அணியின் வின்சன் பற்றிக் பெற்றுக் கொடுத்த கோலின் மூலம் 1:0 எனும் நிலையில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதியாட்டத்தில் மீண்டும் ஐக்கிய அணியின் வின்சன் பற்றிக் மற்றுமொரு கோலையும் பெற்றுக் கொடுத்து தனது அணியை பலப்படுத்தினார். இறுதியில் ஐக்கிய அணி 2:0 எனும் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

அக்குழுவின் இரண்டாவது காலிறுதிப் போட்டியில் அடம்பன் டிலாசால் அணியை எதிர்த்து வங்காலை சென்.ஆன்ஸ் அணி மோதியது.

போட்டி நேர முடிவின்போது இரு அணிகளும்தலா ஒருகோலினை போட்டதனால் ஆட்டம் சமநிலையில் முடிவு பெற்றது. பின் னர் சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட அதில் 4: 1 எனும் கோல்கள் கணக்கில் வங்காலை சென். ஆன்ஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

**அரையிறுதிச் சுற்று**

முதலாவது அரையிறுதிப் போட்டியில் விடத்தல்தீவு ஐக்கிய அணியும் வங்காலை சென்.ஆன்ஸ் அணியும் மோதின. போட்டி ஆரம்பமாகிய வேகத்திலேயே 8ஆவது நிமிடத்தில் சென்.ஆன்ஸ் அணியின் அனஸ்ரியன் லாவகமாக கோல் ஒன்றினை பெற்றுக்கொடுத்து. தனது அணியை முன்னிலைப் படுத்தினார்.

சுற்றுத் தொடரை நடத்தும் ஐக்கிய அணி பின்னிலை வகிக்க, திரண்டிருந்த ரசிகர்களின் ஆக்ரோசமான ஆதரவு ஐக்கிய அணி வீரர்களுக்கு புது உற்சாகத்தை கொடுத்தது. போட்டியின் 16ஆவது நிமிடத்தில் ஐக்கிய அணியின் நிதர்சன் கோல் ஒன்றினை போட, ரசிகர்களின் ஆரவாரத்தால் மைதானம் அதிர்ந்தது.

பின்னர் பெரும் எதிர்பார்ப்பிற்கு மத்தியில் இடம்பெற்ற இரண்டாம் பாதியில் அதே உற்சாகத்தில் களமிறங்கிய ஐக்கிய அணி மீண்டும் ஒரு கோலினை பெற்று, போட்டியை 2:1 என நிறைவுறச் செய்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியானது தோட்டவெளி ஐக்கிய அணிக்கும் முருங்கன் பொதுசன சேவைகள் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் போட்டி ஆரம்பித்து 10ஆவது நிமிடத்தில் நிரோசன் குருவின் எதிர்பாராத கோலின் மூலம் பொதுசன சேவைகள் அணி 1:0 என முன்னிலை வகிக்க ஆட்டம் விறுவிறுப்பானது.

முதல் பாதி முடிவடைவதற்கு 3 நிமிடத்திற்கு முன்னர் ஐக்கிய அணியின் ரெக்சனின் சிறப்பான கோல் ஒன்றின் மூலம் போட்டியின் முதல் பாதியானது 1:1 என சமநிலை பெற்றது.

இரண்டாம் பாதியில் இரு அணி வீரர்களும்வெற்றிக்கான கோலினை போடுவதற்கு முயற் சித்த வேளையில், அதிர்ஷ்டவசமாக போட்டி முடிவடைவதற்கு 6 நிமிடங்களுக்கு முன்னர் பொதுசன சேவைகள் அணிக்கு தண்ட உதை வாய்ப்பு ஒன்று கிடைக்கப்பெற்றது. இதனை சிறப்பாக பயன்படுத்திய அமல், வாய்ப்பை கோலாக மாற்றி அணியை 2:1 என முன்னிலைப் படுத்தினார்.

பின்னர் ஐக்கிய அணியினர் இறுதிவரை போராடியிருந்தும், அவர்களது முயற்சிகள் பொதுசன அணியின் பின்கள வீரர்களின் சிறப்பான தடுப்பாட்டத்தின் மூலம் தகர்க்கப்பட்டன. இறுதியில் பொதுசன சேவைகள் அணி 2:1 என வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.







**இறுதிப் போட்டி**

பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவலர் செல்வம் அடைக்கலநாதன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க, முருங்கன் பொதுசன சேவைகள் அணிக்கும் போட்டித் தொடரை நடத்தும் ஐக்கிய அணிக்கும் இடையிலான தீர்மானம் மிக்க இறுதிப் போட்டி வெகு விமர்சையாக ஆரம்பமானது.

மைதானத்தில் குவிந்திருந்த தங்களின் ரசிர்களின் ஆதரவுடன் களமிறங்கிய ஐக்கிய அணிக்கு, பொதுசன சேவைகள் அணியுடன் கடுமையாகப் போராட வேண்டி இருந்தது. இரண்டு அணிகளும் சம்பியன் பட்டத்தைப் பெற வேண்டும் என்ற கனவோடு விளையாட போட்டியானது விறுவிறுப்பின் உச்ச கட்டத்தினை அடைந்தது.

முதல் பாதி முடிவுற்ற நிலையில் இரு அணிகளும்எதுவித கோலினையும் போடாமல் சமனிலையில் காணப்பட்டது.

பின்னர் இடம்பெற்ற இரண்டாம் பாதியிலும் இரு அணி வீரர்களும் மிகவும் போராட்டத்துடன் தமது திறமையை வெளிப்படுத்தினர். இரு தரப்பினரின் தடுப்பாட்டங்களினால் எந்தவொரு அணிக்கும் கோல்போட முடியாமல்போனது.

எனவே, ஆட்ட நேரம்முடிவடைந்ததும் இரு அணிகளும் சமநிலையடைந்தது. இதனால் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. வழங்கப்பட, அதில் 4-1 எனும் கோல்கள் கணக்கில் வங்காலை சென்.ஆன்ஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

பின்னர் வந்த பொதுசன அணியின் அமல்தமது வாய்ப்பை கோலாக மாற்றி 4:2 என அணியை முன்னிலைப்படுத்தி அணியை வெற்றி பெறச் செய்தார்.

இதன் காரணமாக பொதுசன அணி விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 44ஆவது வருட நினைவுக் கிண்ணத்தை கைப்பற்றி சம்பியன் பட்டத்தைப் பெற்றது. (க)

# கிளிநொச்சி மாணவர்களுக்கான சதுரங்க போட்டிக்கான விண்ணப்பம்

இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தின் 2017ஆம் ஆண்டுக்கான தனியாள் சதுரங்கப் போட்டிகளின் மாவட்ட மட்டப் போட்டிகள் கல்வி அமைச்சின் அனுமதியுடன் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஆதரவுடன் இப் போட்டிகள் நடைபெறவுள்ளன. வருடாந்தம் நாடளாவிய ரீதியாக நடைபெறும் இப்போட்டிகள் கடந்த வருடம் முதல்முறையாக கிளிநொச்சி யில் நடத்தப்பட்டதுடன் 59 மாண வர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 3ஆம் 4ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் 7 வயதின் கீழ், 9 வயதின் கீழ், 11 வயதின் கீழ், 13 வயதின் கீழ், 15 வயதின் கீழ், 17 வயதின் கீழ், 20 வயதின் கீழ் என்ற வயதுப்பிரிவுகளில் ஆண், பெண் என தனித்தனிப் பிரிவுகளாக நடைபெறவுள்ளன. வயதுகள் 2017-01-01 இல் உள்ளவாறாக கணிப்பிடப்படும்.

15, 17, 20 வயதுப் பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களும், குறித்த பிரிவுகளில் போட்டிகளில் பங்குபற்றும் 6 மாணவர்களுக்கு ஒருவர் வீதமும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

7, 9, 11, 13 வயதுப்பிரிவுகளில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியும். இவ்விபரங்கள் போட்டி முடிவில் அறிவிக்கப்படும். போட்டிகளில் பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். தேசிய மட்ட போட்டிகள் இம்மாதம் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறும்.

மாவட்ட மட்டத்திலான இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவதுடன், பங்குபற்றும் மாணவர்களது பெயர் விபரம் அடங்கிய விண்ணப்பங்களை பொறுப்பாசிரியர் எதிர்வரும் 2ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கு கரைச்சிக் கோட்டக்கல்வி அலுவலகத்தில் உரிய கட்டணங்களைச் செலுத்தி நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும் எனவும், வருகை தரும் போது குறித்த மாணவர்களது வயதினை உறுதிப்படுத்துவதற்காக அவர்களது பிறப்புச் சான்றிதழ்களையும், அடையாள அட்டைகளையும் கொண்டு வருதல் வேண்டும் எனவும் கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத் தலைவர் தி.சிவரூபன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவங்கள் உரிய பாடசாலைகளுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 077 699 1078 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவார்ப்பணம்

# அன்னை எனும் ஆலயத்தில் ஆண்டவனாய் அமைந்து

# ஈராண்டு நினைவுதனில்...



அன்னையின் மடியில்
25 . 02 . 1950

ஆண்டவனின் நிழலில்
26 . 05 . 2015

அமரர்

# நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி

(ஜெகதா ஹாட் வெயர்ஸ் ஸ்தாபகரும் உரிமையாளரும் – கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்)

திதி : வளர்பிறை நவமி (02.06.2017)

தாயுமானவரே!

கனலி ஒத்த கணவானே - எம் ஐயனே!
கஜமுகத்தானின் காலடியில் சரணமானீர்!

காப்பு நாணாய் எமைக் காத்தவரே!
காமதேனுவாய் ரட்சித்தீரே!

கிளைஞர்களுக்கும் கிரணம் ஆனீர்!
கிம் புருடராக எண்ணிக் கிளர்ந்தீரே!

கீழோர்க்கும் கீதை சொன்னீர்
கீர்த்திமை கொண்டு உயர்ந்தீரே!

குங்குமம் கொண்ட குலவது வான் ஏக
குலிசம் போன்றவரே குவலயம் வெறுத்தீரே!

கூத்தனின் பாதம் பணிந்து வாழ
கூடு நீத்துக் கூற்று வனுடன் சென்றீரே!

கெழுதகைமை கொண்டு கெடி போல் வாழ்ந் தீரே!
கெட்டி கொண்டு கிரி போல் உயர்ந்தீரே!

கேண்மையுற்றவருக்கு கேடயமாய் நின்றீரே!
கேளிருக்கும் கேந்திரமாய் வாழ்ந்தீரே!

கையர்க்கும் கை தனை விரிக்காது கைரேகை தேய்ந்தவரே!
கைலாய நாதருக்கு கைங்கரியம் ஆற்றச் சென்றீரோ!

கொஞ்சும் மழலைகளின் கொட்டுமேளம் கேட்டீரே!
கொடி வழிதனைக் கண்டு கொண்டாடினீரே!

கோத்திரம் யாவுக்கும் கோமானாய் வாழ்ந்தீரே!
கோரிக்கை வைக்கின்றோம் கோவிந்தராய் எமைக்காக்க!

கௌத்துவம் போல் கௌரவம் கொண்டவரே!
கௌமாரித் தாயிடம் தான் ஆறுதல் பெற்றீரோ?

அஃது நிச்சயம் கிடைத்திருக்கும் உம் ஆருயிர்க்கு
ஆதி பராசக்திதான் அன்புள்ளவள் ஆயிற்றே!

ஐயனே!
கொடி வழி பெருகும் போது
தங்கள் நல் அறங்களும் தொடரும் என
அக்கினிப் பிளம் பெனக் கொதித்து வழியும்
விழிநீரை சாட்சியாக்கி வாக்களிக்கின்றோம்.

35/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

ஈரவிழிகளுடன்,
குடும்பத்தினர்.

(9105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார...

முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய அமைச்சர் நாட்டில் மீண்டுமொரு மோதல் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் நல்லிணக்கம் நீடித்த சமாதானம் ஏற்படாமல், நாட்டில் மீண்டுமொரு மோதலை தவிர்க்காமல் பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது.

நல்லிணக்கத்திற்கு முன்னுரிமை அளித்தே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் செயற்படுகின்றது.

நல்லிணக்க அமைச்சும் அது தொடர்பிலேயே அவதானம் செலுத்தியுள்ளது. மனித உரிமைகள், ஜனநாயகம், சட்டவாட்சி, நல்லாட்சி அரசாங்கம் ஆகியவற்றை நிலைநிறுத்துவதன் ஊடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம்.

நல்லிணக்கம் மற்றும் ஸ்தீரமான அடித்தளம் இல்லாமல் நிலையான பொருளாதார அபிவிருத்தியை அடைவது சாத்தியமாகாத விடயம்.

உருவாக்கப்படவுள்ள புதிய யாப்பு மிக முக்கியமானது. அந்த யாப்பின் ஊடாக இலங்கையினது பல மொழிகள், இனங்கள் மற்றும் மதங்களை உள்ளடக்கிய ஒரு நாடு என்ற பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்வதாக அமையும். இவ்வாறே ஜனநாயகப்படுத்தப்பட்ட நல்லாட்சி மற்றும் நல்லிணக்கம், உண்மையை கண்டறிதல், பொறுப்புக்கூறல் மற்றும் மீண்டும் ஒரு மோதல் நிகழாமை உள்ளிட்ட விடயங்கள் இன்றி நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது என மங்கள சமரவீர தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மகி...

பத்து நாட்கள் அவர் ஜப்பானில் தங்கியிருப்பார் என முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இந்தப் பயணத்தின்போது ஜப்பானில் உள்ள பௌத்த ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்ளவுள்ள மகிந்த ராஜபக்ஷ, அங்குள்ள புலம்பெயர் சிங்களவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

ஆட்சியை இழந்த பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஜப்பானுக்கு மேற்கொண்டிருக்கும் இரண்டாவது பயணம் இதுவாகும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அவரது மகன் ரோஷித ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஹான் ரத்வத்தே உள்ளிட்ட ஒன்பது பேர் கொண்ட குழுவினர் ஜப்பானுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜப்பானின் பேரரசரின் அழைப்பை ஏற்றே மகிந்த ராஜபக்ஷ ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-1)

கிளிநொச்சியில்
Auto CAD
Lecture by K.N.Mugunthan[DR]
2D -3D-Drawings
Cert.in Auto CAD(2D & 3D-Drawing)
University of Pertheniya
Cert.in Auto CAD(Advance 3D-Modeling)
University of Moratuwa
Civil
Mechanical
Link:0775116320-0718617972

மலிவு-50%off
பெரிய மற்றும் சிறிய அளவிலான பல வர்ண
வளர்ப்பு மீன்கள்
Link:0711430599

காட்சியறை உடன் தேவை
சங்கானை மத்தியில் காட்சியறை ஒன்று உடன் தேவை (9107)
தொடர்புகளுக்கு 0728319321

FALC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு வகுப்புக்கள்
2006 முதல் இன்றுவரை 1261 மாணவர்கள்
இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 03.06.2017 சனி 8.00 0779 789 456 021 221 7781
No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. 29.05.2017 பி.ப. 4.00 021 320 2973
IELTS Life Skills A1, B1 வகுப்புக்களும்.....
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)
(C-8651)

0/L உடன் மாதம் 25,000/- சம்பாதிக்க!
100க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 9ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் ஜூன் 6 செவ்வாய் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
175.முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி).யாழ்ப்பாணம்.
(சி-6741)

IELTS
IELTS Test Prep
வெளிநாடுகளில் STUDENT VISA வில் படிப்பதற்கு அவசியமான IELTS எளிமையான முறையில் கற்பிக்கப்படும்
● வேலைசெய்வோரின் நலன்கருதி மாலை நேரங்களிலும் வார இறுதி நாட்களிலும் வகுப்புகள் நடைபெறும்
● பிரத்தியேக வகுப்புக்களும் (PERSONAL CLASSES) உண்டு.
தொடர்புகளுக்கு: 0768226236
49 A, சப்பல் லேன், யாழ்ப்பாணம் (சி-673)
V2 TRAVELS

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்
■ வட மாகாண முன்பள்ளி ஆசிரியர் தரம் - III
■ முகாமைத்துவ உதவியாளர்
பிரிவு - I சனி, ஞாயிறு 9.00 - 11.00 am
பிரிவு - II சனி, ஞாயிறு 3.00 - 5.00 pm
ஆரம்பம் - 03.06.2017 சனி 9 am
மேலதிக தொடர்பு : 077 217 0065
ஐடியல் கல்லூரி - மானிப்பாய்
கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி
(9106)

ENGINEERING
STUDY in CHINA
100% SCHOLARSHIPS AVAILABLE.
*Conditions Apply
# Fully English Medium
# IELTS Not Required
# Low Course fee
# 100% Visa Success Rate
# Part Time Job Allowed
Admission Open for the Year 2017
* Conditions Applied
iCS STUDY OVERSEAS
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் 021 4926222
107 B 1/1 Galle Road,Colomb 6
Appointment 077 3013060
(C-6746)

அச்சகத்துக்கு கணினி இயக்குநர்கள் தேவை
அச்சகக் கணினி வேலையில் முன் அனுபவம் உள்ளவர்களும் பயிலுநர்களும் (பெண்) தேவை.
04.06.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 - 12.00 மணிக்கு இடையில் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.
சிவரஞ்சனம் ஓவ்செற் பிரிண்டேர்ஸ்
பலாலி வீதி, கோண்டாவில்.
தொ.பே :077 306 8982
(9093)

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



அமரர்
திருமதி பரமேஸ்வரி செல்வராஜா
முன்னாள் ஆங்கில ஆசிரியர் (அமரர் சித்தியாரின் மனைவி)
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (03.06.2017) சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
"துவாரகை"
இல.06, அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
M.S.யுவீந்திரா (மகன்) குடும்பம்
(ஓய்வுநிலை இலங்கை வங்கி உத்தியோகத்தர்)
Dr.மகேசன் குடும்பம்
மகேந்திரன் (மகம்) குடும்பம்
(9097)

வட இந்திய காசி சீரடி யாத்திரை
ஆரம்பம் : 05.08.2017
யாத்திரீகர் - 20 நாள்கள் - 15
செல்லுமிடங்கள்: டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், அலகாபாத் (கங்கா.ஜமுனா, சரஸ்வதி), திருவேணி, சங்கமம், கயா, காலமானவர்களுக்கு சிரார்த்தம் செய்யும் இடம். புத்தகயா,புத்தாலயங்கள், சீத்தமடி, காசி (வாரணாசி), 3 நாள்கள் குருசேத்திரம், பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம், மும்பாய், சீரடி பாபா, சனி, சிங்கனாப்பூர், அக்கல்கோட், பாபா, இராமேஸ்வரம், மதுரை, துல்க்காப்பூர் அம்மன் கோயில், வேறு இடங்களும் காணலாம். ஒரு நாள் சென்னையில் சொப்பிங். உங்களிடம் வாங்கும் ரூபாவுக்கு எமது சேவை. 4 விமானப் பயணம், A/C வாகன வசதி, மூன்று வேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, படகுக் கட்டணங்கள் எயாபோட் போக வர வாகன வசதி, 2 பேருக்கு குளியலறை (வெஸ்ரன் கொமட்) இணைந்த அறைகள் (NON AC) குடிநீர் (மேலும் ஆலயங்களில் எடுக்கும் புகைப்படங்கள் 25 அன்பளிப்பாகத் தரப்படும்) விருப்பமுடையவர்கள் பாஸ்போர்ட் போட்டோக் கொப்பியும் ஒரு பாஸ்போட் சைஸ் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். மேலும் விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். (C-6740)
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
மகன் ராஜன்
No. 59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு-11
Tel: 077 768 0102/ 077 736 2154
Facebook:Sriranganathanthuraiappa

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.